வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු






Email : news@eelanadu.lk | மலர் : 01 | 17.08.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 256 | பக்கங்கள் : 16

# ஏழு அமைச்சுகளில் அதிரடி மாற்றங்கள்

- பவித்ராவின் சுகாதார அமைச்சு கெஹலியவிடம்
- டலஸ் வசமானது ஊடகத்துறை
- நாமலுக்கு மேலும் ஓர் அமைச்சு
- தினேஷுக்கு கல்வி
- பீரிஸுக்கு வெளிவிவகாரம்

கொழும்பு, ஓகஸ்ட் 17

**நாடு கொரோனாப் பெருந்தொற்றுச் சவாலை எதிர்கொண்டுள்ள தற்போதைய நிலைமையில் அமைச்சரவையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிரடி மாற்றங்களைச் செய்துள்ளார். அதற்கமைய முக்கிய ஏழு அமைச்சுகள் கைமாற்றப்பட்டுள்ளன.**

சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த பவித்ரா வன்னியாராச்சியிடமிருந்து அந்த அமைச்சுப் பறிக்கப்பட்டு கெஹலிய ரம்புக்வெலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பவித்ராவுக்கு போக்குவரத்து அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மாற்றங்கள் செய்யப்பட்ட ஏழு அமைச்சுக்களின் விபரம் வருமாறு:-

ஜீ.எல்.பீரிஸ் - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், தினேஷ் குணவர்த்தன - கல்வி அமைச்சர், பவித்ரா வன்னியாரச்சி - போக்குவரத்து அமைச்சர், கெஹலிய ரம்புக்வெல - சுகாதார அமைச்சர், காமினி லொக்குகே - மின்சாரத் துறை அமைச்சர், டலஸ் அழகப்பெரும - ஊடகத்துறை அமைச்சர், நாமல் ராஜபக்ஷ - இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சர்.

கடும் சர்ச்சைகளுக்குள்ளாகிய உதய கம்மன்பிலவின் வலு சக்தி அமைச்சுப் பதவியில் மாற்றம் எதுவும் இடம்பெறவில்லை.

(இ)



## எதிர்பாராத தருணத்தில் நடந்தது எனது அமைச்சுப் புதவி மாற்றம்!

### பவித்ரா வன்னியாராச்சி ஆதங்கம்

கொழும்பு, ஓக. 17

எதிர்பாராத தருணத்தில் சுகாதார அமைச்சர் பதவியில் இருந்துதான் நீக்கப்பட்டார் என முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய போக்குவரத்து அமைச்சருமான பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

சத்தியப்பிரமாணம் செய்யும் வரை தனக்கு அது தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சுக்கு பதிலாக போக்குவரத்து அமைச்சு வழங்கப்பட்டது.

15

## முஸ்லிம் எம்.பிக்களுக்கும் இராஜாங்க அமைச்சுகள்

### பிள்ளையானுக்கும் கிடைக்கும்

கொழும்பு, ஓக. 17

அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்ட நேற்று இராஜாங்க அமைச்சுக்கள் சிலவற்றுக்கும் அமைச்சர்கள் நியமிக்கப்படவிருந்தனர். ஆனால், அது பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நசீர் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட ஆலோசிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாவுக்கும் அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்க அரச

15

## கன்னாதிட்டி மக்கள் வங்கி 24ஆம் திகதி வரை முடக்கம்!

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி மக்கள் வங்கி கிளை எதிர்வரும் 24ஆம் திகதி வரை முடக்கப்பட்டுள்ளது.

வங்கியின் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து வங்கி

15




## கொடிகாமம் சந்தை தற்காலிக முடக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 17

கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்ட நிலையில் கொடிகாமம் பொதுச் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 17

15

## நாட்டில் மேலும் 167 பேரை பலிகொண்ட கொரோனா!

கொழும்பு, ஓக. 17

நாட்டில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை 167 பேர் கொவிட்-19 நோயினால் உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கொவிட்-19 நோயினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை

15

## பொதுமக்களின் நடமாட்டத்தை 80-90 சதவீதமாக குறையுங்கள்

கொழும்பு, ஓக. 17

கோவிட்-19 நோய்த்தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த சமூகத்தில் பொதுமக்கள் நடமாட்டத்தை 80 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை குறைக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

கோவிட்-19 நோய்த்தொற்றைக் கட்டுப் படுத்தும் செயலணி மற்றும் சுகாதார அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அறிவியல் முறைக்கு வெளியே, தடுப்பூசி

15

## யாழ்ப்பாணத்தில் நால்வர் கொரோனாவால் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை மேலும் நால்வர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அச்சுவேலியைச் சேர்ந்த 85 வயது டைய ஆண் ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 39 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்தார்.

அத்துடன், பருத்தித்துறை இமையாணன் பகுதியில் மயங்கி வீழ்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை

15

## தொற்றாளரை வீட்டில் பராமரிக்கும் திட்டம் வடக்கு மாகாணத்தில் நேற்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 17

கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டம் வடக்கு மாகாணத்தில் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கோவிட் -19 நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டமானது இலங்கையின் மேல் மாகாணத்தில் மட்டும் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டமானது தற்போது ஏனைய மாகாணங்களிலும் நடை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து ஒலித்த வெரித்தாஸ் வானொலியின் பணிப்பாளராக இருந்தவர் அருட்பணி கஸ்பர் ராஜ் அடிகளார்.

தொண்ணூறுகளின் கடைசிப்பகுதியில் பாரிஸிலிருந்து வெளிவந்த 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகையில் தொடர் பத்தி எழுதிவந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் ஹவார்ட் பல்கலைக்கழக சட்டமேதையுமான நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்ட வாரம், அவர் தனது பத்தியில் அந்தப் படுகொலையை நியாயப்படுத்தி எழுதியிருந்தார்.

ஒரு கத்தோலிக்க குருவானவர், எவ்வளவுதான் தமிழ் இன உணர்வாளராக இருந்தாலும் ஒரு படுகொலையை நியாயப்படுத்தி எழுதியதை, அவரை ஒருதடவை நேரில் சந்தித்தபோது அவருடன் தர்க்கிக்க வேண்டிவந்தது.

ஈழநாடு ஆசிரியர் தனது பத்திரிகையில் எழுதுகின்றவர்களை, அவர்களின் கருத்துக்களை அப்படியே பிரசுரம் செய்து வந்ததால் கஸ்பர் ராஜ் அடிகளார் எழுதுகின்ற அனைத்தும் பத்திரிகையில் அப்படியே வெளிவந்தன. அடிகளாரை நேரில் சந்தித்தபோது, அதுகுறித்து அவருடன் நீண்டநேரம் தர்க்கம்புரிய நேர்ந்தது.

அதேபோலவே, மன்னார் ஆயராக இருந்த இராயப்பு யோசப் ஆண்டகை தமிழ் மக்கள்மீதான அனைத்து வகையான அடக்குமுறைகளையும் எதிர்த்துவந்தபோது, அவரை 'வெள்ளை ஆடைக்குள் உள்ள ஒரு புலி' என்றே சிங்கள ஊடகங்கள் வர்ணித்தன.

அரச படைகளின் அட்டூழியங்களுக்கு எதிராகக் குரல்கொடுத்த இவர்கள் எவரும், தமிழ் மக்கள்மீது சில தமிழ் இயக்கங்களே படுகொலைகளை நிகழ்த்தியபோது கண்டும் காணாமல் இருந்து வந்ததும் கவனிக்கத்தக்கது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று குரல்கொடுத்துவரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதிர்வரும் 21ஆம் திகதி நாடு தழுவிய போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

தாக்குதல் நடந்து முடிந்த பின்னர், நாட்டின் தேசிய பாதுகாப்பு கேள்விக்கு உரியதாகியிருந்தபோது, கர்தினால் தெரிவித்துவந்த கருத்துக்கள், ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சிக்கு வருவதற்கு உதவியது என்பது ஆய்வுக்குரியதல்ல.

ஆனால், இப்போது அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள், அவர்மீதும் பல கேள்விகளைக் கேட்க வைத்திருக்கின்றது. ஒரு பொறுப்புவாய்ந்த மதத்தலைவர் ஒருவரிடமிருந்து வரக்கூடியவை அல்ல அவர் எழுப்புகின்ற கேள்விகள்.

இருபதாவது அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கின்ற அதிகாரங்கள், அவர் நீதித்துறையில் தலையிட காரணமாகிவிடும் என்றும் அதனால் நீதியான விசாரணை நடப்பதற்கு சாத்தியமில்லை எனவும் தெரிவித்திருக்கும் கர்தினால், சர்வதேசத்திடம் முறையிடப் போவதாகவும் மிரட்டல் விடுத்திருக்கிறார்.

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று நம்பப்படும் சஹ்ரான் குழுவினருக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையில் அன்று சிற்சில கொடுக்கல் - வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இவை என்ன என்ற வினா எழுகின்றது. ஆமி மொய்தீன் ஊடாக இடம்பெற்ற அந்த கொடுக்கல் - வாங்கல்கள் என்ன? இது தொடர்பில் விசாரணை இடம்பெற்றதா? இவ்வாறும் கர்தினால் கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இராணுவத்திற்குமிடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலங்களில் இராணுவத்திற்கு தகவல்கள் வழங்குபவர்களாக சஹ்ரான் மாத்திரமல்ல, பல நூறு முஸ்லிம் இளைஞர்களை இராணுவம் பயன்படுத்தி வந்ததாக கூறப்படுவதுண்டு. அதற்காக அவர்களுக்கு கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

அதிகம் ஏன்? யுத்தத்தில் இராணுவத்தினருக்கு உதவிய தமிழ் இயக்கங்களின் உறுப்பினர்களுக்கும் மாதாந்த வேதனம் வழங்கப்பட்டதாக கூறப்படுவதுண்டு. இவற்றையெல்லாம் இப்போது கேள்விக்குட்படுத்துவது ஏன் என்ற கேள்வி எழுவதும் தவிர்க்கமுடியாததே.

விடயம் அதுவல்ல. இந்த அரசின் மீது இவ்வளவு விரைவாக நம்பிக்கையிழந்து சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிவரும் என்று எச்சரிக்கை விடுக்கும் கர்தினால், பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தமக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் கோரிக்கையின் நியாயத்தை இனியாவது புரிந்துகொள்வார் என்று நம்புவோம்.!

- ஊர்க்குருவி

# முதியோர் இல்லத்தில் 46 தொற்றாளர்: தொடர்ச்சியாக மூன்று பேர் மரணம்!

கொழும்பு, ஓக. 17

அடுத்தடுத்து மூவர் உயிரிழந்த நிலையில் முதியோர் இல்லம் ஒன்றில் 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதியோர் இல்லம் ஒன்றில் கோவிட் தொற்றுக்குள்ளான மூன்று முதியவர்கள் உயிரிழந்தனர்.

கண்டியில் அமைந்துள்ள குறித்த முதியோர் இல்லத்தில் இதுவரை 46 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு தொற்றுக்குள்ளான இருவர் உயிரிழந்த நிலையில், நேற்று இன்னொரு முதியவரும் உயிரிழந்தார் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

குறித்த முதியோர் இல்லத்தில் 63 பேர் வசித்து வருகின்றனர் என்று கண்டி மாநகர சபையின் சுகாதார பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## ஆப்கானிலிருந்து 8 இலங்கையர்கள் வெளியேறினர்



கொழும்பு, ஓக. 17

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் இருந்த இலங்கையர்களில் 8 பேர் பிரித்தானியா மற்றும் கட்டாருக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மூன்று இலங்கையர்கள் பிரித்தானியாவிற்கும் ஐந்து பேர் கட்டாருக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற அட்மிரல், பேராசிரியர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்தார்.

மேலும் 60இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் காபூல் நகரில் தங்கியுள்ளனரெனவும், அவர்களையும் அங்கிருந்து அழைத்துச் செல்லுமாறு சில நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக பேராசிரியர் ஜயனாத் கொலம்பகே கூறினார். (ஐ)

## வவுனியாவில் இருவர் மரணம்!

வவுனியா, ஓக. 17

வவுனியாவில் கோவிட் தொற்று காரணமாக இருவர் மரணமடைந்தனரென சுகாதார திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்றுக்குள்ளான நிலையில் வவுனியா வைத்திய சாலையின் கோவிட் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த இருவரே சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மரணமடைந்தனர்.

வவுனியா, நெடுங்கேணி, ஒலுமடு பகுதியைச் சேர்ந்த 87 வயது பெண் ஒருவரும், வவுனியா, இராசேந்திரங்குளம் பகுதியைச் சேர்ந்த 67 வயது ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்தனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார முறைப்படி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 17.08.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி TV CHANNEL - 2 — 17.08.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.08.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆவணி 31

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் தலிபான்களிடம் அதிகாரம்?

பல்வேறு நாடுகளில் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டிருக்கும், மிகவும் கடும்போக்கு இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தலிபான்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றனர். ஆப்கான் தலைநகரான காபூலை கைப்பற்றியதைத் தொடர்ந்து ஒட்டுமொத்த அதிகாரமும் மீண்டும் அவர்களின் வசமாகியிருக்கின்றது. ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். ஆப்கான் படையினர் மோதலை தவிர்க்கும் நோக்கில் தலிபான்களிடம் சரணடைந்துவிட்டனர். உண்மையில் தலிபான்கள் இராணுவ ரீதியில் மிகவும் பலமாக இருப்பதால் அவர்களுடன் மோதுவதை விடவும் சரணடைவதே உசிதமானது என்னும் அடிப்படையிலேயே படையினர் சரணடைந்துவிட்டனர். முக்கிய அரசியல் தலைவர்கள், இராணுவ தளபதிகள் அனைவரும் நாட்டைவிட்டு வெளியேறி விட்டனர். தற்போது தலிபான்கள் இடைக்கால அரசாங்கத்தை அமைத்திருக்கின்றனர்.

2001 செப்ரெம்பரில் அமெரிக்க இரட்டை கோபுரத்தின்மீது, இஸ்லாமிய பங்கரவாத அமைப்பான அல்ஹைடா தாக்குதலை நடத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை பிரகடனம் செய்தது. அல்ஹைடாவின் தலைவர் பின்லேடனுக்கு அடைக்கலம் அளித்து, ஆதரவு வழங்கியதால் தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஆப்கானிஸ்தான்மீது, 2001 ஒக்ரோபரில் அமெரிக்க படையினர் தாக்குதலை தொடுத்தனர். இதனைத் தொடர்ந்து தலிபான் அமைப்பின் தலைவர்களும் பின்லேடனும் பாங்கிஸ்தானுக்கு தப்பிச் சென்றனர். ஆப்கானிஸ்தானின் ஆட்சி முற்றிலும் அமெரிக்க ஆதரவு தரப்பிடம் சென்றது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம், டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகமும் நேட்டோ படையணியும், தலிபான்களுடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்தன. இதனைத் தொடர்ந்து, 14 மாதங்களுக்குள் அமெரிக்க படையினரை முற்றிலுமாக திருப்பி அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து செப்ரெம்பர் 2021இற்குள் அமெரிக்க படையினர் ஆப்கானிலிருந்து வெளியேறுவார்கள் என உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். அந்த வெளியேற்றமே தற்போது இடம்பெற்றிருக்கின்றது. அமெரிக்க படையினர் ஆப்கானை விட்டு வெளியேறியதை தொடர்ந்து, குறைந்தது ஆறு மாதத்திற்குள், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் வீழ்சியடைந்துவிடும் என அமெரிக்க உளவுத்துறை கணித்திருந்தது. அதுவே, தற்போது நடந்திருக்கின்றது.

தலிபான்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளாவர். இஸ்லாமிய ஷரியா சட்டத்தை அமுல்படுத்துபவர்கள். அதனடிப்படையில்தான் ஆண்கள் தாடி வைக்க வேண்டும், பெண்கள் முற்றிலலுமாக தங்களை மறைக்கும் ஆடைகளை அணிய வேண்டும், பெண்கள் பாடசாலைகளுக்கு செல்லக் கூடாது என கடுமையான சட்டங்களை அமுல்படுத்துபவர்கள். அடிப்படையில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை விரும்பும் மனிதர்கள் இவர்களின் ஆட்சியின் கீழ் வாழவே முடியாது. மீறி எவரேனும் கேள்வி கேட்டால், அவர்கள் பொது மக்கள் முன்னிலையில் கொல்லப்படுவார்கள். அமெரிக்க ஆதரவு ஆட்சியின் கீழ் சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவித்த ஆப்கான் மக்கள் அச்சத்தில் உறைந்து போயிருக்கின்றனர். ஆனால், அமெரிக்க படையினர், ஆப்கானிலிருந்து வெளியேற்றுவது தொடர்பில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில், 57 வீதமானவர்கள், வெளியேற்ற வேண்டும் என்பதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தனர். 20 வீதத்தினர் மட்டுமே எதிராக வாக்களித்திருந்தனர்.

மீண்டும் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் வசம் வந்திருப்பது, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை மோசமாக பாதிக்கும் என சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் பலவும் எச்சரித்திருக்கின்றன. அமெரிக்காவின் நீண்ட கால நலன்களை கருத்தில் கொண்டே, அமெரிக்கா இவ்வாறான ஒரு முடிவை எடுத்திருக்கின்றது. மூலோபாய நலன்கள் என்று வருகின்றபோது, மனித உரிமைகள் சார்ந்த கரிசனை பின்னுக்கு சென்றுவிடும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். சர்வதேச அரசியல் சூழல் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கும் தமிழர் தரப்புக்கள் மிகவும் கவனமாக இந்த விடயத்தை பரிசீலிக்க வேண்டும். இது பற்றி ஊடகவியலாளர்களிடம் பேசுகின்ற போது, அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு கூறியிருக்கின்றார். “அவர்கள் (ஆப்கானிஸ்டுகள்) தங்களுடைய தேசத்திற்காகத் தாங்களே போராட வேண்டும்.”

# பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மீண்டும் போர் கொடி!



**-அலசுவது இராஜதந்திரி-**

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக் களப்பு ஆகிய இடங்களில் இடம்பெற்று இரு வருடங்களுக்கு மேலாகியுள்ளது. இருந்த போதிலும் இதுவரை உருப்படியாக விசாரணை எதுவும் இடம்பெறவில்லை எனவும் , உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு திருப்திகரமாக இல்லாதிருக்கின்ற அதேசமயம் அந்த ஆணைக்குழு விசாரணை அறிக்கையை ஆராயவும் உபகுழுவொன்று அரசினால் அநாவசியமாக அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கவலை வெளியிட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் “பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு“ என்ற ரீதியில் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு விசாரணைகளை முன்னெடுக்க சர்வதேச சமூகத்தின் உதவியை நாடப்போவதாகவும் கூறியுள்ளார்.

தமது முடிவை பரிசுத்த பாப்பரசருக்கும் அறிவித்துள்ளாரெனவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தமது கண்டனத்தை வெளியிட்டிருப்பதும், சர்வதேச சமூகத்தின் உதவியை நாடப்போவதாகவும் அறிவித்துள்ளமை இது முதல் தடவையல்ல. ஏற்கனவே, பல தடவைகள் கடந்த இரு வருடங்களில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குறித்து தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தமது உயிர்த்த ஞாயிறு குறித்த மன ஆதங்கத்தை வெளியிட்டுள்ள தருணத்திலேயே மக்கள் விடுதலை முன்னணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க இன்றைய ஆட்சியை சர்வாதிகாரப் போக்குடையது என்று சாடியுள்ளார்.

அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கிறார் எனவும் அமைச்சரவை முடிவுகளை அவர் மதிப்பதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாகவும் , பொருளாதரா ரீதியாகவும் இன்றைய அரசு பலத்த பின்னடைவுகளை சந்தித்துள்ள நிலையில் இலங்கை ஒரு ‘தோல்வியுற்ற நாடு’ என்ற நிலைக்கு வந்துள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், நிதி அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசியல், பொருளாதார பின்னடைவுகளுக்கு மத்தியில் தற்போது முழு நாட்டையும் ஆட்டிப்படைத்துவரும் கோவிட்-19 இலங்கையில் எகிறிச்செல்கின்ற விதத்தை நோக்கும்போது நாட்டின் சௌக்கிய சேவையையும் கோவிட்-19 நாடளாவிய ரீதியில் பரவாத விதத்தில் ஜனாதிபதியினால் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியாதுள்ளதென்பதையே அறிய முடிகின்றது.


இதேவேளை எதிர்வரும் செப்ரெம்பரில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது மகாநாட்டில் இலங்கை தொடர்பாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் எவ்வளவு தூரம் முன்னேற்றகரமான முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றும் கொழும்பு வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராயரின் அறிவிப்பு, முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் ஏற்கனவே, வடக்கு-கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் இன்றைய ஆட்சியாளர்கள்மீது தமது நம்பிக்கையின்மையை வெளியிட்டு சர்வதேச சமூகத்தின் உதவியை நாடப்போவதாக கடந்த பல வருடங்களாகவே கூறிவருவதில் எவ்வளவுதூரம் உண்மையிருக்கின்றது என்பதை நன்கறியமுடியும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் ஏககாலத்தில் கண்ணிமைக்கும் நேரத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பலியெடுத்திருந்தன. ஆனால், சுமார் மூன்று தசாப்த காலங்களாகவும் பின்னர் 2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின்போது வன்னியில் நூற்றுக் கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டு சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிடுவதுபோல உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக மட்டுமல்ல வடக்கு - கிழக்கு மனித அவலங்கள் தொடர்பாகவும், மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டிருப்பதுபோல எதேச்சையான அரசியல் கலாசாரத்தை இலங்கையிலிருந்து அகற்றுவதற்கும் சர்வதேச சமூகத்தினாலேயே கைகொடுக்க முடியுமென கருதலாம்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

இளைஞர்களின் நீண்ட கால முயற்சி வெற்றி பெறும். சிலர் உங்களை சீண்டுவார்கள். உணர்ச்சிவசப்பட வேண்டாம். புது அனுபவம் கிடைத்து வாழ்வில் பாடம் பெறுவீர்கள்.

**இடபம்**

பணியிடத்தில் திட்டமிட்ட விஷயம் தடையின்றி முடியும். வீட்டிலும் பணியிடத்திலும் வளைந்து கொடுக்க வேண்டும். தீய எண்ணங்களை முறியடிக்கும் உறுதி பெறுவீர்கள்.

**மிதுனம்**

உழைப்பால் உயரும் நாள். சுபநிகழ்ச்சி ஏற்பாடாகும். கலவையான பலன்கள் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உதவும். உண்ண, உறங்க நேரமின்றி உழைப்பீர்கள். உற்சாகம் கூடும்.

**கடகம்**

பாசத்துக்குக் கட்டுப்படுவீர்கள். செயல்பாட்டில் சுறுசுறுப்பு கூடும். அனுபவசாலிகளின் ஆலோசனையுடன் முக்கிய முடிவு எடுப்பீர்கள். வியாபாரிகளுக்கு இன்றைய தினம் லாபகரமாக அமையும்.

**சிம்மம்**

புதிய விஷயங்களுக்காக நீங்கள் செய்த முயற்சிகள் வெற்றியாகும். புதிய நட்பால் பிரச்னைகள் ஏற்படாமல் கவனம் தேவை. புதுத் தொடர்பு கிடைக்கும். நன்மை நிகழ நல்லவர் உதவுவார்.

**கன்னி**

பகை தீர்வதற்காக எடுத்த முயற்சியில் நிம்மதி ஏற்படும். எது பற்றியும் பயம் வேண்டாம். குழந்தைகளின் வாழ்வு மேம்படும். எதிர்பாராத சந்திப்பு ஒன்று நிகழும். திறமையால் சாதிக்கும் நாள்.

**துலாம்**

கலைத்துறையினருடன் நட்பாகும் வாய்ப்பு கிடைக்கும். முன் எப்போதோ மறுக்கப்பட்ட உரிமை ஒன்று இன்று கிடைக்கும். தடுமாற்றம் ஏற்படும்போது உடன்பிறந்தவர் துணைபுரிவார்.

**விருட்சிகம்**

பணியாளர்கள் முயற்சியுடன் கூடிய உழைப்பால் உயரும் நாள். தாயாரின் அறிவுரையால் குழப்பம் ஒன்று தீரும். திறமையை நிரூபிப்பீர்கள். வரவு கணிசமாக அதிகரிக்கும்.

**தனுசு**

அலட்சியம் காரணமாக ஏமாறாமல் கவனமாக இருங்கள். புது நபர் அறிமுகம் பற்றி கவனம் தேவை. கடன் வாங்குமுன் யோசியுங்கள். குடும்ப நபர்களிடையே அனுசரித்து போயாக வேண்டும்.

**மகரம்**

சிறு வெற்றி ஒன்று ஏற்பட்டுச் சந்தோஷம் கூடுதலாகும். கொடுத்த பணத்தைத் திருப்பிப் பெறும்போது கடுமை வேண்டாம். எதிர்பார்த்திருந்த உதவி நேரம் தப்பாமல் கிடைத்துவிடும்.

**கும்பம்**

புதிய கோணத்தில் சிந்தித்து வெற்றி அடைவீர்கள். சுபநிகழ்ச்சி ஒன்றின் மூலம் நண்பர், உறவினர் தொடர்பு அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் பொறுப்பு சுமக்க வேண்டி வரும்.

**மீனம்**

செலவினங்கள் அதிகரிக்கும். ஆடம்பரத்தில் நாட்டம் கூடும். உங்களின் தனிப்பட்ட ரகசியம் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பணியில் கவனமும், விரைவும் கூடும். உற்சாகம் குறையாது.

# ஆட்சியை பிடிப்பதே எமது இலக்கு; இனிமேல் கூட்டணிக்கு இடமில்லை

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் திட்டவட்டம்

சென்னை, ஒக. 17

தி.மு.க, அ.தி.மு.கவுடன் வரும் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி இல்லை என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் நேற்று இதனைத் தெரிவித்த அவர், ஆட்சியைப் பிடிப்பதுதான் தமது இலக்கு எனவும் அறிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

”உள்ளாட்சித் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். உள்ளாட்சித் தேர்தலில் தற்போதைய கூட்டணியில் தொடரும். ஆட்சியைப் பிடிப்பதுதான் பா.ம.கவின் இலக்கு. 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதுதான் இலக்கு. சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.கவுடன் கூட்டணி இருக்காது. அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கு மாற்றம், முன்னேற்றம், அன்புமணிதான். பாராளுமன்றத் தேர்தல் கூட்டணி குறித்து முடிவு எடுப்போம்.

பட்ஜெட்டில் மதுவிலக்கு குறித்த அறிவிப்பு இல்லாதது ஏமாற்றமளிக்கிறது. எதிர்கட்சியாக அ.தி.மு.க. இன்னமும் சிறப்பாக செயல்பட வேண்டும். வேளாண் துறைக் கான தனி பட்ஜெட்டுக்காக அரசை எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம். பா.ம.க, அ.தி.மு.க உறவு சுமூகமாக உள்ளது. எந்த விரிசலும் இல்லை” எனவும் அவர் தெரிவித்தார்.

# தேர்தல் வாக்குறுதிகளில் இருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம்

## சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஒக. 17

“வெள்ளை அறிக்கை வெளியிட்டு தி.மு.க.அரசு பின்வாங்க முயற்சிக்கவில்லை. முறைகேடுகள் களைந்த பிறகு திட்டங்கள் நிச்சயம் நிறைவேற்றப்படும்” என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கின்றார்.



தமிழக சட்டசபை பட்ஜெட் கூட்டத் தொடரின் 3 வது நாள் கூட்டம் நேற்று தொடங்கியது. கூட்டத்தில் மறைந்த முன்னாள் எம்.எல்.ஏக்களுக்கு சபாநாயகர் அப்பாவு இரங்கல் குறிப்பு வாசித்தார். மதுரை ஆதீனம் அருணகிரிநாதர், ஸ்டேன் சுவாமி, இளங்குமரனார் ஆகியோருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும் போது, ”அனைத்து இல்லத்தரசிகளுக்கும் உரிமைத் தொகை என்று அறிவித்துவிட்டு தற்போது ஏழை இல்லத்தரசிகளுக்கு மட்டும் என்று கூறுகிறீர்கள்?” எனக் கேள்வி எழுப்பினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இதற்குப் பதிலளித்துப் பேசும் போது, ”வெள்ளை அறிக்கை வெளியிட்டு தி.மு.க. அரசு பின்வாங்க முயற்சிக்கவில்லை. விவசாய நகை கடன்களில் பல் வேறு முறைகேடுகள் நடைபெற்று உள்ளன. முறைகேடுகள் களைந்த பிறகு திட்டங்கள் நிச்சயம் நிறைவேற்றப்படும். அ.தி.மு.க. கொடுத்த வாக்குறுதிகளை ஆட்சியில் இருந்த போது நிறைவேற்றவில்லை அ.தி.மு.க. அளித்த வாக்குறுதிகளான இலவச செல்போன், இலவச மினரல் வாட்டர் உள்ளிட்டவை என்னாச்சு?” என கேள்வி எழுப்பினார்.

# தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை அகற்ற சட்டசபையில் தீர்மானம் இயற்ற வேண்டும்

## வலியுறுத்துகின்றார் கமல்ஹாசன்



சென்னை, ஒக. 17

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக அகற்றிட, சட்டசபையில் சிறப்பு தீர்மானம் உடனடியாக இயற்றப்பட வேண்டும் என்று கமல்ஹாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

பேரழிவை உருவாக்கும் திட்டங்களும், தொழிற்சாலைகளும் ஏன் வளரும் நாடுகளில் உருவாக்கப்படுகின்றன? என ஒரு செனட் சபை உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு, “மூன்றாம் உலக நாடுகளில்தான் உயிர்களின் விலை மலிவானது“ என்று பதில் வந்தது.

ஐரோப்பாவில் இயற்கை வளங்களைச் சீரழிக்கும் ஒரு திட்டம் வரும் என்றால் அதற்கு மிகப்பெரிய விலையை அபராதமாகக் கொடுக்க நேரிடும். ஆகவே, சூழலைப் பாதிக்கும் எந்த உற்பத்தியையும் மூன்றாம் உலக நாடுகளில்தான் ஊக்குவிப்பார்கள். இந்த மனோபாவத்திற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல என்பதன் அடையாளங்களுள் ஒன்று தான் ஸ்டெர்லைட்.

தி.மு.க. அரசு தேர்தல் வாக்குறுதிகளில் உறுதியளித்தபடி, ஸ்டெர்லைட் ஆலையை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். நடைபெற்றுக்கொண்டிருக்கும் சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே இந்த உயிர்க்கொல்லி ஆலையை நிரந்தரமாக அகற்றும் சிறப்புத் தீர்மானத்தை இயற்றவேண்டும். தீர்மானத்தின் நகல் உச்சநீதிமன்றத்தின் பார்வைக்கும் கொண்டு செல்லப்படவேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# சகல வர்த்தக நிலையங்களும் கம்பஹா மாவட்டத்தில் மூடல்

கொழும்பு, ஒக. 17

கோவிட் பரவல் காரண மாக கம்பஹா நகரில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூட கம்பஹா வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது. கம்பஹா மேயர் எரங்க சேனாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

அதேபோல்,நேற்று முதல் யக்கல நகரின் வர்த்தக நிலை யங்களையும் மூட யக்கல வர்த் தக சங்கம் தீர்மானித்துள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கெப்பற்றிப் பொல நகரின் வர்த்தக நிலை யங்களை நேற்றுமுன்தினம் முதல் மூட நகரின் வர்த்தகர்கள் தீர்மானித்தனர்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 253 பேர் கைது

கொழும்பு, ஒக. 17

நேற்றுக் காலை முடிவ டைந்த கடந்த 24 மணித்தி யாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட் டில் 253 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமா கிய அஜித் ரோஹண தெரி வித்தார்.

மேலும், அனுமதியின்றி மாகாண எல்லைகளை கடக்க முற்பட்ட 361 வாகனங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேபோல், தொடர்ந்தும் கடுமையான கண்காணிப்பு நட வடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.



# விசமிகளால் 6 படகுகளுக்கு தீ வைப்பு

திருமலை, ஒக. 17

திருகோணமலை - கும்புறுப் பிட்டி, நாவற்சோலை கடற் கரையில் 6 மீன்பிடிப் படகுகள் இனந்தெரியாத விசமிகளால் நேற்று அதிகாலை ஒரு மணிய ளவில் எரியூட்டப்பட்டுள்ளன.

இதன்போது, நான்கு பட குகள் முற்றாக எரியூட்டப்பட் டன. அத்துடன் இரண்டு படகு களுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளன.

இது குறித்து பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத் தியுள்ளனர். சம்பவ இடத்துக் குச் சென்ற பொலிஸார், சந் தேகத்தின் பேரில் மூவரை கைது செய்துள்ளனர்.மீனவர் களுக்கு இடையிலான பகையே இதற்குக் கார ணம் என தெரிவிக் கப்படுகிறது.சம்பவம் தொடர் பான மேல திக விசாரணை களை குச்ச வெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளுடன் எங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை

## தலிபான் இயக்கம் அறிவிப்பு



காபூல், ஒக.16

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட காலப்பகுதியிலோ அல்லது அவர்கள் தோல்வியடைந்த பின்னரோ அந்த இயக்கத்துடன் தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என தலிபான் இயக்கம் அறிவித்துள்ளது.**

தமக்கு வழங்கிய செவ்வி யில் தலிபான் செய்தித் தொடர் பாளரும் சர்வதேசப் பேச்சு வார்த்தைகளில் முன்னிலை வகிப்பவருமான சுஹைல் ஷாஹீன் இவ்வாறு தெரிவித் துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

நாங்கள் ஒரு சுயாதீன விடு தலைப் படை. புலிகள் இயக் கத்துடன் எங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை. நாங்கள் கடந்த 20 ஆண்டுகளாக ஆப் கானிஸ்தானின் விடுதலைக்கா கவும், வெளிநாட்டு ஆக்கிரமிப் புக்கு எதிராக போராடினோம் என ஷாஹீன் கூறினார்.

தலிபான்கள் ஆப்கானிஸ் தான் தலைநகர் காபூலின் எல் லையில் இருந்தபோது டோகா வில் இருந்து பேசியபோதே தலிபான் செய்தித் தொடர்பா ளர் சுஹைல் ஷாஹீன் இவ் வாறு குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தான் பாமியன் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த உலகின் மிக உயரமான புத்தர் சிலை கடந்த 2001 மார்ச் மாதம் தலிபான்களால் அழிக்கப்பட் டது. இதனைக் கண்டித்த நாடு களில் இலங்கையும் ஒன்றாகும்.

இந்நிலையில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வரும் நிலை யில் ஆப்கானிஸ்தானில் உள்ள பௌத்த தலங்களுக்கு அச்சுறுத் தல் ஏற்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் தலிபான் தலைமை யிலான நிர்வாகத்தின் கீழ் ஆப்கா னிஸ்தானில் உள்ள பௌத்த தளங் களுக்கு ஆபத்து ஏற்படாது என ஷாஹீன் தெரிவித்தார்.

தலிபான்களை பயங்கரவாதி களாக இலங்கை கருதக்கூடாது. இலங்கையின் விடுதலைக்காகப் போராடிய உங்கள் முன்னோர் களைப் போல் நாங்கள் ஆப் கானிஸ்தானின் சுதந்திர விடு தலைப் போராளிகள். ஆனால் எங்களை தீவிரவாதிகளாகச் சித் தரித்து விசமப் பிரசாரம் முன்னெ டுக்கப்பட்டது எனவும் ஷாஹீன் தெரிவித்துள்ளார்.

# ரிஷாத்தின் மைத்துனருக்கு பிணை!

கொழும்பு, ஒக. 17

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டின் கீழ் கைது செய் யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளு மன்ற உறுப்பினர் ரிஷாத் பதி யூதீனின் மைத்துனர் பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு-கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சந் தேகநபர் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்தே, இவ்வாறு பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார்.

5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையின் கீழ் சந்தேக நபர் இவ்வாறு விடுவிக்கப்பட் டுள்ளார்.

# பயணத்தடையை மீறுவோர் கைது செய்யப்படுவார்கள்

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 17

மாகாணங்களுக்கு இடையி லான பயணத்தடையை மீறு வோர் கைது செய்யப்படுவர் என பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரி வித்துள்ளார்.

அத்துடன், அவர்கள் பய ணிக்கும் வாகனங்களும் கைய கப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில இடங்களில் மாகாண எல்லைகள் வரையில், பஸ்களில் பயணித்து பின்னர் அங்கிருந்து நடைபாதையாக சென்று வேறு பஸ்களின் மூலம் சிலர் பய ணிப்பதாக அவர் தெரிவித் துள்ளார்.



அவ்வாறு பயணிக்கும் பஸ்லிபன் உரிமையாளர், சாரதி,நடத்துநர் உட்பட சம் பந்தப்பட்டவர்களுடன் குறித்த பஸ்ஸூம் கையகப்படுத்தப்ப டும் என்றும் அவர் குறிப்பிட் டார். அனுமதியின்றி மாகாண எல்லைகளை கடக்க முற்பட்ட 361 வாகனங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதா கவும் அவர் மேலும் கூறினார்.


# அரச, தனியார் நிறுவனங்களின் பெயரில் கிளிநொச்சியில் இருந்து மணல் கடத்தல்!

கிளிநொச்சி, ஒக. 17

தர்மபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பகுதிகளில் இடம் பெற்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளில் ஈடுபட்ட வாக னங்களுடன் சந்தேக நபர்கள் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ் வில் ஈடுப்படுகின்றவர்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்க ளின் பெயர்கள் பொறிக்கப் பட்ட வாகனங்களில் வெளி மாவட்டங்களுக்கு மணலை எடுத்துச் செல்வதாக பொலிஸ ார் தெரிவித்தனர்.

தருமபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பகுதியில் பாது காப்பு கடமையில் ஈடுபட்டு கொண்டிருந்த பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தக வலுக்கமைய கல்லாறு பகுதி



யில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய 2 டிப்பர்களும் அதன் சாரதிகளும் மற்றும் புளி யம்பொக்கணைப் பகுதியில் ஒரு டிப்பரும் தருமபுரம் பகுதியில் ஒரு டிப்பரும் கல்மடு பகுதியில் ஒரு உழவு இயந்திரம் அதன் சாரதியும் மற்றும் ஒரு டிப்பரும் பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டன.

அரச மற்றும் தனியார் நிறு வனங்களின் பெயர்ப்பலகையை அவர்கள் தமது வாகனங்களில் காட்சிப்படுத்தி குறித்த மணல் கடத்தல் இடம்பெற்றுள்ளது.

தற்போது சூட்சுமமான முறை யில் மணல் வெளி மாவட்டங்க ளுக்கு கொண்டு செல்லப்படு வதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசார ணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா மரணங்களில் 14 ஆம் இடத்தில் இலங்கை!

கொழும்பு, ஒக. 17

நேற்று முன் தினம் வெளி யிடப்பட்ட கொரோனா மரணங்களின் எண்ணிக் கைக்கு அமைவாக, தற் போது உலகளவில் நாளொன்றில் பதிவாகும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளது.

அத்தோடு, ஆசிய நாடு களின் வரிசையில் இலங்கை 10 இடத்தில் காணப்படு கிறது. உலக நாடுகளின் கொரோனா நிலவரத்தை துல்லியமாக வழங்கும் வேர்ள்ட்மீற்றர் இணையத் தளத்தின் புள்ளிவிவரங் களில் இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது.



# கொரோனா ஒழிப்பு சமரை உடனே சுகாதார பிரிவிடம் ஒப்படைக்கவும்

## குமார வெல்கம கோரிக்கை

கொழும்பு, ஓக. 17

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். இராணுவத்தினர் நாட்டை பாதுகாக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எடுத்துரைத்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவத்தளபதி சுரேந்திர சில்வா மிகவும் நேர்மையானவர். அவர் கோவிட் -19 தட்டை தடுப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். இருந்தாலும் கொவிட்-19 அவரால் தடுக்க முடியவில்லை. போர் செய்வது போல கோவிட்-19 தொற்றை ஒழிக்க முடியாது.

இது சுகாதார விதிகளை கட்டுப்படுத்தும் பிரச்னை. ஆகையால் கோவிட்-19 தொற்றை இல்லாதொழிக்க அதற்கு உகந்த சுகாதார உயர் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கும் பட்சத்தில் தான் இவ்வாறான தொற்றை இல்லாதொழிக்க முடியும்.

தற்போது நாட்டில் பல்வேறு வகையான கோவிட்-19 தொற்றுகள் உருவாகியுள்ளன. இதற்கு முழுமையான காரணம் சுகாதார முறைகளைப் பின்பற்றாதால் ஏற்பட்ட விலைவும் தான்தோன்றித்தனமாக நடத்தியதுமாகும்.

இராணுவத்தினர் நாட்டைப் பாதுகாக்கப் பணியாற்றுபவர்கள். அவர்கள் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள். அவர்களை சுகாதார சேவைகளில் ஈடுபடுத்தாமல் நாட்டில் உள்ள அனைத்து சுகாதார உயர் சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும். அப்போது தான் நாட்டில் கொவிட் தொற்றை இல்லாது ஒழிக்க முடியும்-என்றார்.

# மக்களை மரணப் பொறிக்குள் தள்ளுகிறது கோட்டாபய அரசு

## அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.17

**கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவிவரும் சூழ்நிலையில் மரணத்தின் பிடிக்குள் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு பதிலாக, மரணப் பொறிக்குள் மக்களை தள்ளுவதற்காகவே தனது அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்தி வருகின்றார். கனவுலகில் வாழும் அவர், துறைசார் நிபுணர்களின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில்லை. தனக்கு தேவையானவற்றை செய்து மரணத்துடன் விளையாடுகின்றார் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.**

ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

கொரோனா வைரஸ் தொற்றால் 9 நிமிடங்களுக்கு ஒருவர் உயிரிழக்கும் நிலை காணப்படுகின்றது. நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களில் 5 வீதமானோர் மரணிக்கும் பயங்கரமான நிலைமையும் உருவாகியுள்ளது. இந்நிலையில் கடும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறும், நாட்டை உடன் முடக்குமாறும் விசேட வைத்தியர்களும், துறைசார் நிபுணர்களும் வலியுறுத்திவருகின்றனர்.

உலக சுகாதார நிறுவனமும் மேற்படி பரிந்துரையை முன்வைத்துள்ளது. எனினும், துறைசார் நிபுணர்களின், வைத்தியர்களின் கருத்துகளை ஜனாதிபதி செவிமடுப்பதில்லை. சமூகத்தின் நிலைமை என்னவென்பது அவருக்கு தெரியாது. மாறாக அரச புலனாய்வுப் பிரிவால் வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாக வைத்தே முடிவுகளை எடுக்கின்றார்.

நாட்டின் தற்போதைய நிலைமை என்ன, எதிர்காலத்தில் எவ்வாறானதொரு நிலைமை ஏற்படும், அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்காக சரியான



தகணவல்கள், தரவுகள் அவசியம். ஆனால் அரசிடம் அவ்வாறு சரியான தகவல்கள் இல்லை. மாற்றப்பட்ட - திரிவுபடுத்தப் பட்ட தரவுகளே உள்ளன என்பது உறுதியாகியுள்ளது.

அவற்றை வைத்துக்கொண்டு எவ்வாறு சரியான முடிவுகளை எடுப்பது? ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசு மரணத்துடன் விளையாடுகின்றது. அரசால் வெளியிடப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கையில் நம்பிக்கை, நம்பகத்தன்மை இல்லை. சுகாதார தரப்புகள் கூட இதனை சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிச்சையாக செயல்படுகின்றார். கனவுலகில் வாழ்ந்துக்கொண்டு முடிவுகளை எடுக்கின்றார். துணைக்கு இராணுவத் தளபதியை வைத்துக்கொண்டுள்ளார். ஜனாதிபதியின் முடிவை ஆளுங்கட்சியில் உள்ளவர்கள்கூட இன்று ஏற்பதில்லை. ஜனாதிபதிக்கு நாட்டு மக்கள் வாக்களித்தனர். ஆனால் எவரும் உயிரை எழுதி வைக்கவில்லை.

எனவே, மக்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரச பிரதான என்ற வகையில் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அந்த பொறுப்பை அவர் சரிவர நிறைவேற்ற வேண்டும். ஆனால் நாளாந்தம் நூற்றுக்கு மேற்பட்டோர் சாகும் நிலையிலும் ஜனாதிபதி மௌனம் காப்பதிலிருந்து அவரின் மனோநிலை எப்படிபட்டது என்பது தெளிவாகின்றது. அதாவது பிறரின் கருத்துக்கு செவிமடுக்க தான் தயாரில்லை, தன்னால் எடுக்கப்படுவதே முடிவு என்ற தொனியிலேயே அவர் செயல்படுகின்றார்.

அன்று ஹிட்லர் போரில் தோற்கும் தறுவாயில், படைத் தளபதிகளால் முன்வைக்கப்பட்ட யோசனையை ஏற்கவில்லை. தனக்கு தேவையான செய்தியை மட்டுமே ஹிட்லர் எதிர்ப்பார்த்தார். தோல்வி குறித்து தகவல் தெரிவித்தால் தளபதிகளை விரட்டியடிப்பார். வெற்றி தொடர்பான தகவல் மட்டுமே அவருக்கு அவசியம். கோட்டாபயவும் அப்படிதான். இதனால் செயலணிக் கூட்டத்தில் எவரும் கதைப்பதில்லை.

20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக சர்வ பலத்தையும் ஜனாதிபதி பெற்றுக்கொண்டார். மக்களை மரணப் பொறிக்குள் இருந்து காப்பாற்றுவதற்காக அவர் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை. மாறாக மக்களை மரணப் பொறிக்குள் தள்ளுகின்றார்." இது மனிதப் படுகொலையாகும். இதற்கு அவர் பொறுப்புக்கூறியாக வேண்டும்-என்றார்.

# கொரோனா ஒழிப்புக்கான வேலைத்திட்டங்கள் எவை?

## அரசிடம் ரணில் கேள்வி

கொழும்பு, ஓக. 17

கொரோனா நெருக்கடி நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக சர்வக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தை ஜனாதிபதி உடன் கூட்ட வேண்டும். பிரதமர், சபாநாயகர் மற்றும் சுகாதார அமைச்சரையும் இக் கூட்டத்துக்கு அழைக்கவேண்டும். அரசின் வேலைத்திட்டம் என்னவென்பது தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுத்த அவர் மேலும் கூறியவை வருமாறு:

கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருகின்றது. மரண எண்ணிக்கையும் 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்தாவிடின் 30 ஆயிரம்பேர்வரை உயிரிழக்கக்கூடும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த மே மாதத்தில்போன்று கடும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டால் 12 ஆயிரம்பேர்வரைதான் உயிரிழப்பார்கள் எனவும் கூறப்படுகின்றது. எனவே, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டால் 18 ஆயிரம் மரணங்களை தடுக்கக்கூடியதாக இருக்கும்.

தற்போதைய சூழ்நிலையில் கொரோனா நிலைமையை சமாளிப்பதற்காகவே சுகாதார சேவை முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றது. அந்தவகையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் சுகாதார சேவையும் ஸ்தம்பிக்கும் அபாயம் காணப்படுகின்றது.

கொரோனா நிலைமையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி யோசனை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்றத்தில் விவாதம் கோரியிருந்தோம். தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தையும் கூட்டமுடியாத சூழ்நிலைமையே காணப்படுகின்றது. எம்.பிக்களுக்கும் கொரோனா ஏற்பட்டுள்ளது.

எனவே, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை ஜனாதிபதி உடன் கூட்ட வேண்டும். பிரதமர், சபாநாயகர் மற்றும் சுகாதார அமைச்சரவையும் குறித்த கூட்டத்துக்கு அழைக்க வேண்டும். குறித்த சர்வக்கட்சி கூட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை எவ்வாறு கட்டுப்படுத்துவது, மரண எண்ணிக்கையை எவ்வாறு குறைப்பது, நெருக்கடி நிலைமை எப்படி எதிர்கொள்வது என்பது உட்பட அரசின் வேலைத்திட்டம் என்னவென்பது தொடர்பில் தெளிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார்.

# மூன்றாவது அலையில் 19 கர்ப்பவதிகள் மரணம்

கொழும்பு, ஓக. 17

கொரோனா மூன்றாவது அலையில் 19 கர்ப்பவதிகள் மரணித்துள்ளனர் எனவும் இவர் கள் அனைவரும் கொரோனா தடுப் பூசியைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை எனவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்தார்.

எனவே, நாட்டிலுள்ள அனைத்துக் கர்ப்பவதிகளுக்கும் கொரோனா தடுப் பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். தடுப்பூசியை ஏற்றுவதற்கான திகதியை, தாங்கள் வசிக்கும் பகுதிக்குப் பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரிகள் ஊடாக அறிந்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கொரோனா தொற்று தற்போது தீவிரமடைந்து வருவதால், கர்ப்பவதிகள், அநாவசியமாக வீட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டார்.

## தென்மராட்சிப் பகுதியில்

# வியாபாரிகள் 10 பேர் உட்பட 23 பேருக்கு கொரோனா உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 17

தென்மராட்சியில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனைகளில் வியாபாரிகள் பத்துப் பேர் உட்பட 23 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் சந்தைத் தொகுதியில் தொற்றாளர்கள் 17 பேர் சில நாட்களில் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இருந்தபோதிலும் சந்தையை முடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில்,

நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் சந்தை வியாபாரிகள் பத்து பேர் மேலும் மூவர் என கொடிகாமம் பகுதியில் 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை,

எழுதுமட்டுவாள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான அன்டிஜென் பரிசோதனையிலும் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களே தொற்றால் அதிகம் உயிரிழப்பு



கொழும்பு, ஒக. 17

கோவிட் தொற்றில் மரணிப்பவர்களில் நான்கில் மூன்று பேர் 60 வயதுக்கு மேற்பட்ட, கோவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களாவர். இவ்வாறு மூன்று இலட்சத்துக் கும் அதிகமான முதியவர்கள் முதலாம் கட்ட தடுப்பூசியை கூட இதுவரை பெறாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதன் மூலமே மரணங்களின் எண்ணிக்கையை குறைக்கலாம் என இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

கோவிட் காரணமாக மரணிப்பவர்களில் அதிகமானவர்கள் முதியவர்கள் என்பதனால், அதனை கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் மொத்த சனத்தொகை 220 இலட்சமாகும். இதில் 27 இலட்சத்து 50ஆயிரம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். அதாவது, மொத்த சனத்தொகையில் 12.5 வீதமானவர்கள் முதியவர்களாவர்.

கோவிட் தொற்றில் உயிரிழக்கும் எண்ணிக்கையை பார்க்கும்போது அது அவர்களில் 75 வீதமாகும். அதாவது நான்கில் மூன்று பேர் 60வயதுக்கு மேற்பட்டவர்களாவர். அப்படியாயின் நாட்டில் ஏற்படும் கோவிட் மரணங்களில் அதிகமானவை 60வயதுக்கு மேற்பட்டவர்கள்.

அதனால் பொலிஸார், கிராமசேவகர்களின் ஒத்துழைப்புடன், இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இனம் கண்டு, அவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு விசேட ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அவர்களில் அதிகமானவர்கள் பல்வேறு நோய்கள் காரணமாக வீட்டில் இருந்து வெளியில் செல்ல முடியாமல் இருப்பதாக எமக்கு தகவல் கிடைத்திருக்கின்றது. அதனால், அவர்களின் வீடுகளுக்கு சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது- என்றார்.

# பருத்தித்துறையில் காணி சுவீகரிப்பு மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக.17

**வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் இராணுவத்துக்கு காணி சுவீகரிப்பதற்கான நில அளவை முயற்சி, பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக தற்காலிகமாக கைவிடப்பட்டது.**

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கற்கோவளம் இராணுவ முகாமுக்கென 4 ஏக்கர் தனியார் காணி சுவீகரிக்கப்படவிருந்தது. காணி அளவீட்டு பணி நேற்றுக் காலை 9:30 மணிக்கு இடம்பெறுமென உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, காணி உரிமையாளர்கள், பொதுமக்கள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் எனப் பலரும் அங்கு திரண்டனர்.

நில அளவை திணைக்களத்தினர் அளவீட்டுக்கு வந்தபோது, மக்கள் வீதிக்கு குறுக்கே அமர்ந்து எதிர்ப்பு தெரிவித்தனர்.

பொதுமக்களின் காணிகளை இராணுவத்தினருக்கு வழங்க மாட்டோம் என போராட்டக்காரர்கள் உறுதியாக தெரிவித்த நிலையில், நிலஅளவை திணைக்களத்தினர் அளவீடு செய்ய முடியாத நிலைமையேற்பட்டது.



இந்தப் போராட்டம் சுமார் ஒருமணி நேரம் நீடித்த நிலையில், காணியை இராணுவத்திற்கு வழங்கமாட்டோம் என பொதுமக்கள் சார்பில் யாராவது தெரிவித்தால் தாம் திரும்பிச் செல்வதாக நில அளவைத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

பொதுமக்கள் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கையெழுத்திட்ட கடிதம் எழுதி நில அளவைத்திணைக் களத்தினரிடம் கொடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நில அளவை திணைக்கள அதிகாரிகள் திரும்பி சென்ற நிலையில் இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. (அ-02)

# மஹரகம பொலிஸ் நிலையத்தில் 12 பேருக்கு கோவிட் தொற்று உறுதி

கொழும்பு, ஒக. 17

மஹரகம பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர்கள் நால்வர் உட்பட 12 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளனரென தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அவர்களுடன் தொடர்பில் இருந்த 15 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த காரணத்தால் பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

# புதிய பொலிஸ் ஊடகப்பேச்சாளராக நிஹால் தல்துவ

கொழும்பு, ஒக. 17

புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது பொலிஸ் ஊடகப் பணிப்பாளராக செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# களியாட்டங்களை தடுக்கவே இரவு நேரத்தில் ஊரடங்கு அமுல்



கொழும்பு, ஒக. 17

நாட்டில் இரவு நேரங்களில் களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதன் காரணமாகவே இரவில் மாத்திரம் ஊரடங்கை அமுல் படுத்த தீர்மானித்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று திங்கட்கிழமை முதல் தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட வுள்ளது.இந்த நிலையில், இது குறித்து ஊடகமொன்றுக்கு தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# 2 டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் 45 இலட்சம் பேர்

கொழும்பு, ஒக. 17

நாட்டில் இதுவரை 11,850,308 பேருக்கு கோவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், 4,527,502 பேருக்கு கோவிட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று முன்தினம் மாத்திரம் 27,016 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன் தினம் 83,518 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 871,841 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை 159,081 பேருக்கு ஸ்புட்னிக் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. மேலும் 14,517 பேருக்கு ஸ்புட்னிக் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதேபோல், இதுவரை 252,290 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ள நிலையில், 31605 பேருக்கு பைசர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், 765,441 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2,865 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2,435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார் மங்கள!

கொழும்பு, ஒக. 17

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மங்கள சமரவீர நிமோனியாவால் பாதிக்கப்பட்டுள்ளார். அத்துடன், வேறு சில தொடர்புடைய சிக்கல்களாலும் பாதிக்கப்பட்டதையடுத்தே அவர் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டதாக அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டபோதும் மங்கள சமரவீர கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டமை கடந்த வாரம் உறுதி செய்யப்பட்டது. (அ)

# இன்று மட்டும் சபை அமர்வு

கொழும்பு, ஒக. 17

இந்த வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வுகளை இன்று செவ்வாய்க்கிழமை மாத்திரம் முன்னெடுப்பதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிப்பதற்காக நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கொரோனா பரவல் நிலைமைக்கு மத்தியில் பாராளுமன்ற அமர்வுகளை நடத்துதல் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பஸிலுடன் பேசுவதற்கு தயாராகும் கூட்டமைப்பு?

**சர்வதேச ரீதியாக உருவாகிவரும் அழுத்தங்களும், அடுத்த மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டுள்ள புதிய பிரேரணையும் இலங்கைக்கு கலக்கத்தைக் கொடுத்திருக்கின்றது.**






அகிலன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சு ஒன்றை நடத்துவதற்குத் தயா ராகின்றா? கூட்டமைப்புடன் தற் போதைய கட்டத்தில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏன் ஏற்பட்டது? இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேச்சு முயற்சிகளின் பின்னணியில் அமெரிக்கா சம்பந்தப்பட்டிருக்கின்றதா?

கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்ற சில நிகழ்வுகள் இந்தக் கேள்விகளை அரசியல் வட்டாரங்களில் எழுப்பியிருக்கின்றன. கூட்டமைப்புடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அதேவேளையில் பேச்சுக்களுக்கு முன்னோடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துப் பேசியிருக்கின்றார். இவை எல்லாம் பகிரங்கப்படுத்தப்படாமல் இரகசியமாக இடம்பெற்றிருக்கின்றது. ஆனால், தகவல்கள் இப்போது கசிந்திருக்கின்றது.

கூட்டமைப்புடன் அரச தரப்பு பேச்சுக்களை நடத்துவதற்காக முன்னெடுத்துள்ள முயற்சிகள் தமிழ் அரசியல் வட்டாரங்களிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான 'ரெலோ' இந்தச் செய்தியால் கொதித்தெழுந்திருக்கின்றது. நிபந்தனையற்ற வகையில் பேச்சு ஒன்றுக்குச் செல்ல முடியாது என அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார். இந்தப் பின்னணியில், கடந்த இரு வாரங்களாக என்ன நடைபெறுகின்றது என்பதை சுருக்கமாகப் பார்ப்போம்.

### அமெரிக்க ஆதரவில் பேச்சுக்கான முயற்சி

கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சு முயற்சிகளில் அமெரிக்காவும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்திருக்கின்றது. பஸில் ராஜபக்ஷ இரு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பி அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்ற போதே, பேச்சு ஒன்றுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளிவந்திருந்தன. குறிப்பாக, அமெரிக்க ஆதரவுடன், பஸில் ராஜபக்ஷ இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தது.

இந்தப் பின்னணியில், அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் அலெய்னா தெப்லிஸின் முன்னிலையில் அமைச்சர் பீரிஸுடன் சுமந்திரன் இரகசியமாகப் பேச்சு ஒன்றை இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடத்தியிருந்தார். அமெரிக்க தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்காக இருவரும் அழைக்கப் பட்டிருந்தார்கள். அங்குதான் கூட்ட மைப்புடனான பேச்சுக்களை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்னெடுப்பார் என்ற தகவலை அமைச்சர் பீரிஸ் கூட்டமைப்பின் பேச்சாளரிடம் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தினார்.

இருந்தபோதிலும், பஸில் ராஜபக்ஷ தான் பேச்சுக்களை முன்னெடுக்கப் போகின்றார் என்ற தகவல் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கூட்டமைப்புத் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. கொழும்பில் இந்தியத் தூதுவரை கூட்டமைப்புத் தூதுக் குழு சில வாரங்களுக்கு முன் னர் சந்தித்தது. அதன்போது, "அரசுடனான பேச்சுக்களை எப்போது ஆரம்பிக்கப் போகின்றீர்கள்?" என இந்தியத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்த சுமந்திரன், "பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் பேச்சுக்களை ஆரம்பிப்போம்" எனப் பதிலளித்திருந்தார்.

### சர்வதேச அழுத்தங்கள் நெருக்கடிக்குள் அரசு!

ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலில் கூட்டமைப்புடன் பேச்சு என்பதற்கு உண்மையில் இடமில்லை. இரண்டு காரணங்கள் இதற் குள்ளது. முதலாவது, தனிச் சிங்கள மக்களின் ஆதரவுடன் பதவிக்கு வந்ததாகச் சொல்லிக் கொள்ளும் அரசாங்கமாகவே ராஜபக்ஷ அரசாங்கம் இருக்கின்றது. கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவ தென்பது அதன் "தனிச் சிங்கள முகத்தை" பாதிப்பதாக அமையும்.

இரண்டாவதாக, இனநெருக்கடி ஒன்று இலங்கைத் தீவில் இருக்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வதும் இல்லை. அதற்கு அதிகாரப்பரவலாக்கலின் மூலமாகத்தான் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் அவர்களுடைய கொள்கை அல்ல. இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகவே கூறியிருக்கின்றார். இந்தப் பின்னணியில் கூட்டமைப்புடன் பேசுவதற்கு அவர்களுக்கு என்ன இருக்கின்றது?

ஆனாலும், சர்வதேச ரீதியாக உருவாகிவரும் அழுத்தங்களும், அடுத்த மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா தலைமையிலான நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டுள்ள புதிய பிரேரணையும் இலங்கைக்கு கலக்கத்தைக் கொடுத்திருக்கின்றது. அதனைவிட, அமெரிக்க காங்கிரஸில் முன்வைப்பதற்காக பிரேரிக்கப்பட்டுள்ள இலங்கை குறித்த தீர்மானம், ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்பு என்பன இந்தக் கலக்கத்தை அதிகரித்துள்ளது.

இவ்வாறான கலக்கத்தில் இலங்கை இருக்கும் பின்னணியில்தான் கூட்டமைப்புடன் பேசுவதற்கான அழுத்தம் அமெரிக்காவில் வைத்தே பஸில் ராஜபக்ஷவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது. இலங்கை விவகாரத்தை அமெரிக்கா கையாள்கின்றது என்றால், அதன் பின்னணியில் இந்தியாவும் சம்பந்தப்பட்டிருப்பதாகவே கருதவேண்டும். இந்தியாவின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளாமல், இலங்கை விவகாரத்தை அமெரிக்கா கைகளில் எடுக்காது.

### அமெரிக்காவின் தேவை என்ன?

இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கம் இந்தியாவுக்கு மட்டுமன்றி அமெரிக்காவுக்கும் தலையிடியைக் கொடுக்கும் ஒன்றாகத்தான் உள்ளது. காரணம் - இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு இன்மூலம் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. ஜெனிவா 41/1 தீர்மானத்தை அடிப்படையாக வைத்து இலங்கை மீது கொடுக்கப்படும் அழுத்தங்களின் பின்னணியும் இதுவாகவே இருக்க வேண்டும் என இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

திருமலையில் 33,000 ஏக்கர் காணியை அமெரிக்காவுக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கு இலங்கை இணங்கியிருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் சார்பில் தகவல் ஒன்று சில வாரங்களின் முன்னர் வெளிவந்திருந்தது. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இந்தச் செய்தி மறுதலிக்கப்பட்டிருந்தாலும் கூட, இவ்வாறு வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகவே கருதப்படுகின்றது. இது குறித்தும் பஸில்தான் அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்தியதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் பின்னணியில்தான் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது அதில் இன நெருக்கடிக்கான தீர்வும் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற வகையான அழுத்தங்கள் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளால் ராஜபக்ஷக்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை குறித்த மற்றொரு கடுமையான தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு இணை அனுசரணை நாடுகள் திட்டமிட்டிருப்பதாக கசியவிடப்படும் செய்திகளுக்கும் இதுதான் காரணம்.

### இலங்கை அரசின் உபாயம் என்ன?

இந்த நிலையில்தான் கூட்டமைப்புடன் பேசப்போவதாக அரசாங்கம் சொல்லிக்கொள்கின்றது. அதற்கான முன்னகர்வாகத்தான் சுமந்திரனுடன் பேராசிரியர் பீரிஸ் பேசியிருக்கின்றார். அடுத்த கட்டம் பஸில் கூட்டமைப்பை சந்திப்பதாகத்தான் இருக்க வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் கூட்டமைப்புடன் அவர்கள் பேசுவதை சிங்கள மக்கள் சந்தேகத்துடன் நோக்கப் போவதில்லை. சர்வதேச ரீதியாக உருவாகும் அழுத்தங்களைச் சமாளிக்கத்தான் பேசுகின்றோம் என அவர்கள் சொல்லிக் கொள்ள முடியும். இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதனையும் கொடுக்கப் போவதில்லை என்பது சிங்கள மக்களுக்குத் தெரியும். ஜெனிவாவைத் தாண்டிச் செல்வதற்கான காலங்கடத்தலாக மட்டும்தான் இது இருக்கமுடியும்.

அதேவேளையில் பேச்சுக்குச் செல்வதென்பது கூட்டமைப்புக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். நல்லாட்சியில் அரசுடன் இணக்க அரசியலை கூட்டமைப்பு நடத்தியதும், புதிய அரசியலமைப்பை அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அரசுடன் அவர்கள் நடத்திய பேச்சுக்களும்தான் கடந்த தேர்தலில் கூட்டமைப்பு எதிர்கொண்ட பாரிய பின்னடைவுக்குக் காரணம். தற்போதும் பேச்சுவார்தை ஒன்றுக்குச் செல்வது, ஜெனிவா நெருக்கடியிலிருந்து அரசைப் பிணை எடுப்பதாக மட்டுமே இருக்கும். இது அடுத்த தேர்தலில் கூட்டமைப்புக்கு மேலும் பின்னடைவைக் கொடுக்கும்.

இந்தப் பின்னணியில்தான் இந்த முயற்சியில் தாம் சம்பந்தப்படவில்லை எனக் காட்டிக்கொள்ள ரெலோ முற்படுகின்றது. அரசாங்கம் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினால், அதற்கான நிபந்தனைகளுடன் பேச்சுக்குச் செல்லலாம் என்ற நிலைப்பாட்டை ரெலோ தலைவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். புளொட் இவ்விடயத்தில் மௌனமாக இருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் சுமந்திரனின் நகர்வுக்கு எதிரான கருத்துக் கள் உள்ளன. அவர்களும் மௌனமாக இருக்கின்றார்கள். எதிர்பாராமல் உருவாகியுள்ள விமர்சனங்கள் சுமந்திரனின் முயற்சியைத் தடைப்படுத்துமா? அல்லது வழமை போல விமர்சனங்களை புறக்கணித்து தமது நகர்வை அவர் முன்னெடுப்பாரா?

# தலிபான்களிடம் காபூல் நகரம் ஒரே நாளில் வீழ்ந்தது எப்படி?

**"காபூல் நகரத்துக்குள் பெரிதாக சண்டை ஏதும் நடக்கவில்லை. பெரும்பாலும் இரத்தக் களரி ஏற்படாமலேயே தலிபான்கள் நகரத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றிவிட்டனர். ஆயினும் கராபாக் மாவட்டத்தில் சண்டை நடந்ததாகவும் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாரையும் கொல்ல மாட்டோம், மக்கள் கவலைப்படத் தேவையில்லை என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் ஷாஹீன் தெரிவித்தார்.**

ஆப்கானிஸ்தானில் தலைநகர் காபூலைக் கைப்பற்றியிருக்கும் தலிபான்கள் 'வெற்றி பெற்றதாக' அறிவித்துள்ளனர். இதனால் அங்கு அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகளின் கட்டுப்பாடு கிட்டத்தட்ட 20 வருடங்களுக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அதிபர் மாளிகையை தலிபான்கள் கைப்பற்றிவிட்டனர். அதிபராக் அஷ்ரப் கானி தப்பியோடிவிட்டார். "போர் முடிந்துவிட்டது" என தலிபான் செய்தித் தொடர்பாளர் ஒருவர் அல் ஜசீரா செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

சட்டென ஒரே நாளில் சூழல் மாறிவிட்டதால், காபூல் முழுக்க குழப்பம் நிலவி வருகிறது. குடிமக்களும், வெளிநாட்டினரும் காபூலை விட்டு வெளியேறி விட முயற்சி செய்து வருகிறார்கள். விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடியுள்ளதால் நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. கரும பீடங்களில் ஊழியர்கள் இல்லை. மக்கள் விமானங்களை நோக்கி முண்டியடித்துக் கொண்டு ஓடுகின்றன ரென நேரில் பார்த்த ஒருவர் கூறினார்.

பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய பிறகு தலைநகரான காபூலை தலிபான்கள் அதிரடியாகக் கைப்பற்றினர். முதலில் நகர எல்லைக்கு வெளியே தங்கியிருந்த தங்களது படைகளை நகருக்குள் நுழையுமாறு தலிபான் இயக்கம் உத்தரவிட்டது. பல மாதங்களுக்கு முன்னரே ஆப்கானிஸ்தானைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சி தொடங்கி விட்டாலும் கடந்த சில நாள்களில் தாலிபன்களின் வேகம் தீவிரமடைந்தது. வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்களுக்கே இது அதிர்ச்சியாக இருந்தது.

அமெரிக்கப் படைகள் வெளியேறினாலும், ஆப்கானிஸ்தான் அரசுப் படைகள் சில காலத்துக்குத் தாக்குப் பிடிப்பார்கள் என்று அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் கருதியிருந்தன. ஆனால், சில நாள்களிலேயே எந்தத் தடையும் இல்லாமல் முக்கிய நகரங்கள் அனைத்தையும் தலிபான்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். அதிலும் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் தலைநகர் காபூலையும், அதிபர் மாளிகையையும் கைப்பற்றியது பலராலும் நம்பமுடியாத பேரதிர்ச்சியாக இருக்கிறது. ஏற்கெனவே பெரும்பாலான வெளிநாட்டுப் படைகள் வெளியேறிய பிறகு மிக வேகமாக பல நகரங்களை தலிபான்கள் கைப்பற்றினர்.

அமெரிக்க ராணுவத்தை ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பப் பெறுவதை அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் தீவிரமாக வலியுறுத்தி வந்தார். வேறொரு நாட்டின் உள்நாட்டுப் போருக்கு நடுவே முடிவற்ற அமெரிக்கத் தலையீட்டை நியாயப்படுத்த முடியாது என்று அவர் கூறியிருந்தார்.

ஆப்கானிஸ்தான் மக்கள் " பாதுகாப்பு மற்றும் கண்ணியத்துடன் வாழத் தகுதியானவர்கள்" என்றும், பாதுகாப்பு மற்றும் சிவில் ஒழுங்கு உடனடியாக மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட 60 க்கும் மேற்பட்ட நாடுகள் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளன.

தலிபான்களை விட்டு வெளியேற விரும்பும் எவரையும் அனுமதிக்கவும், சாலைகள், விமான நிலையங்கள் மற்றும் எல்லைகளைத் திறந்திருக்கவும் உலக நாடு கள் அழைப்பு விடுத் திருக்கின்றன. தலிபான்கள் காபூல் நகரை முற்றுகையிடத் தொடங்கியதுமே அங்குள்ள மக்களுக்கு அச்சம் ஏற்படத் தொடங்கிவிட்டது. சூறையாடல் மற்றும் கொள்ளையைத் தடுப்பதற்காக நகருக்குள் நுழைவதாக தலிபான்கள் அறிவித்தனர். அதற்குள்ளாகவே பல முக்கிய பகுதிகளை விட்டு அரசுப் படைகள் வெளியேறத் தொடங்கி விட்டன.



அதன் பிறகு அல் ஜசீரா தொலைக் காட்சியில் அதிபர் மாளிகை தலிபான்களால் முற்றுகையிடப்படும் காட்சிகள் வெளியாகின. காபூலுக்குள் தலிபான்கள் புகுந்தது முதலே அதிபர் கானி எங்கிருக்கிறார் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால் கானி வெளியேறிய பிறகுதான் தலிபான்கள் காபூலுக்குள் நுழைந்திருக்கிறார்கள். அவர் அண்டை நாடான உஸ்பெகிஸ்தானில் தாஷ்கண்ட் நகருக்குச் சென்றிருக்கலாம் என்று அல்ஜசீரா தொலைக்காட்சி கூறியது. நாட்டில் இரத்தம் சிந்தப்படுவதைத் தவிர்ப்பவதற்காகவே இந்தக் கடினமான முடிவை எடுத்ததாக தனது பேஸ்புக் பதிவில் அவர் கூறியுள்ளார்.

"வாள் மற்றும் துப்பாக்கியைக் கொண்டே தலிபான்கள் வெற்றி பெற்றுள்ளனர். மக்களின் மரியாதையைக் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களுக்கு உள்ளது" என்று அவர் கூறினார். ஆனால், நாட்டைக் கைவிட்டு அவர் வெளியேறிவிட்டதாக பிற அரசியல்வாதிகள் அஷ்ரப் கானியை விமர்சித்து வருகின்றனர். காபூல் நகரை தலிபான்கள் சூழ்ந்து கொண்டதுமே மக்கள் மனதில் பீதி குடியேறியது. தங்களது வாகனங்களையும் உடைமைகளையும் அப்படியே விட்டுவிட்டு பலர் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்தனர்.



ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற தான் ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக நடந்ததாக 22 வயதான மாணவர் ஒருவர் பிபிசியிடம் தெரி வித்தார். "என் கால்கள் வலிக்கின்றன, அவற்றில் கொப்புளங்கள் உள்ளன, நான் நிற்பதற்குக்கூட முடியாமல் இருக்கிறேன்," என்று அவர் கூறினார். "நான் கிளம்பும்போது, என் குடும்பத்தைப் பற்றிய நினைவு என்னை வாட்டுகிறது. அவர்களுக்கு தப்பிக்க வழியே இல்லை. எனக்கு எந்த எதிர்காலமும் புலப்படவில்லை" என்றார் அவர்.

அச்சத்தில் மக்கள் பணத்தை எடுக்க முற்பட்டதால் நாள் முழுவதும் வங்கி களில் நீண்ட வரிசைகள் ஏற்பட் டன. ஏ.ரி.எம். மையங்கள் நிரம்பியிருக்கின்றன. "மக்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, சிலர் தப்பி ஓடுகிறார்கள் அல்லது வீடுகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கின்றனர்" என்று உள்ளூர் எம்பியான ஃபர்சானா கோச்சா பிபிசியிடம் தெரிவித்தார். காபூல் நகரத்துக்குள் பெரிதாக சண்டை ஏதும் நடக்கவில்லை. பெரும் பாலும் இரத்தக் களரி ஏற்படாமலேயே தலிபான்கள் நகரத்தின் பெரும்பகுதியைக் கைபற்றிவிட்டனர். ஆயினும் கராபாக் மாவட்டத்தில் சண்டை நடந்ததாகவும் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாரையும் கொல்லமாட்டோம், மக்கள் கவலைப்படத் தேவையில்லை என்று பி.பி.சியிடம் தலிபான் செய்தித் தொடர் பாளர் ஷாஹீன் தெரிவித்தார். மக்கள் தங்களது உடைமைகள் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா தனது பணியாளர்களையும், தங்களுக்கு உதவியவர்களையும் மீட்பதற்காக துருப்புகளை அனுப்பியிருக்கிறது. தூதரக பணியாளர்களைக் கொண்டு செல்லும் ஹெலிகாப்டர்கள் ஞாயிற்றுக்கிழமை நகரத்தின் வான்பகுதியில் பறந்து சென்றன. மேலும் தூதரகத்தில் முக்கிய ஆவணங்கள் எரிக்கப்பட்டதால் தூதரக வளாகத்தின் அருகே புகை எழும்பியதாகக் கூறப்படுகிறது. இதேபோல் சுமார் 600 பிரிட்டன் இராணுவத்தினர் தங்களது மக்களை மீட்கும் பணிக்காகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

மற்ற நாடுகளும் தங்கள் நாட்டவர்களை மீட்பதற்கு தீவிரமாக முயற்சி செய்து வருகின்றன.சில நாடுகள் தங்களது தூதரகங்களை மூடும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இதனிடையே ஆப்கானிஸ்தானின் நிலைமை குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டத்தை கூட்ட ரஷ்யா திட்டமிட்டுள்ளது. தலிபான்களால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதால், தனது தூதரகத்தை மூடுவதில்லை என்று ரஷ்யா கூறியுள்ளது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

23) கரும்பலகையின் அகலம் 12m25cm ஆகும். இதன் நீளம் அகலத்தின் மூன்று மடங்காகும். கரும்பலகையின் நீளம் யாது?

..........................................................................................................

24) 10m நீளமான கயிற்றுத் துண்டில் 45cm நீளமான 6 துண்டுகள் வெட்டப்பட்டால் மிகுதித்துண்டின் நீளம் யாது?

..........................................................................................................

25) 3kg சீனியை 250g கொண்ட எத்தனை சரைகளில் கட்டலாம்?

..........................................................................................................


26) பிற்பகல் நான்கு கடந்து நாற்பத்தைந்து நிமிடம் என்பதை 24 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரமாக எழுதுக.

..........................................................................................................

27) மு.ப 10.30 மணிக்கு ஆரம்பித்த கண்காட்சி பி.ப 4.10 மணிக்கு நிறைவடைந்தது. எனின், கண்காட்சி நடைபெற்ற நேரம் எவ்வளவு?

.......................மணித்தியாலம் ............................. நிமிடங்கள்

28)



இத்திண்ம உருக்களின் உச்சிகளின் கூட்டுத்தொகையின், இரண்டு மடங்கு எத்தனை?

..........................................................................................................

29) சிட்டையினைப் பூரணப்படுத்துக

| பொருள் | வாங்கிய அளவு | ஒன்றின் விலை | | செலுத்த வேண்டிய பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பேனை | 3 | 12 | 00 | ................ | ........ |
| பென்சில் | 5 | 8 | 00 | ................ | ........ |
| சவர்க்காரம் | 1 சோடி | 60 | 00 | ................ | ........ |
| மொத்தம் | | | | ................ | ........ |

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டில் உள் மூச்சு வாங்குதல் வெளிமூச்சு விடுதல் எத்தனையாவது படிமுறையில் இடம்பெறும்?
(1) படிமுறை 3 (2) படிமுறை 1 (3) படிமுறை 2

31) விளாமரம் பூக்கும் மாதம் எது?
(1) ஆனி (2) ஆவணி (3) ஐப்பசி

32) வித்து முளைத்தலுக்கு அவசிய மற்ற காரணி எது?
(1) சூரியஒளி (2) வளி (3) வெப்பம்

33) பின்வருவனவற்றுள் தனியார் நிறுவனம் அல்லாதது
(1) தனியார் வங்கி (2) சிறப்பு அங்காடி (3) பிரதேசசெயலகம்

34) இலங்கையைப் பிரித்தானியர் முழுமையாகக் கைப்பற்றிய ஆண்டு எது?
(1) 1948 (2) 1972 (3) 1815

35) பின்வருவனவற்றுள் பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மை எது?
(1) வித்துக்களை உண்ணுதல்
(2) தாவரங்களுக்குப் பசளை கிடைத்தல்
(3) பூக்களில் தேன் குடித்தல்

36) பின்வருவனவற்றுள் அடிப்படைத் தையல் எது?
(1) சங்கிலித்தையல் (2) கம்பளித்தையல் (3) சிறுநூலோடி

37) உப்பிட்டு உலர்த்துவதன் மூலம் நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கப்படும் உணவு எது?
(1) ஜாம் (2) பனங்கிழங்கு (3) மீன்

38) உணவுகளைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பேணாமை காரணமாக எமக்கு ஏற்படும் தீங்கு எது?
(1) வயிற்றோட்டம் (2) இரத்த அழுத்தம் (3) நீழிரிவு

39) பின்வருவனவற்றுள் பாதுகாப்பற்ற சந்தரப்பம் எது?
(1) வெள்ள நீரில் நீராடச் செல்லாது இருத்தல்
(2) மின்னல் மின்னும் வேளையில் வீட்டினுள் இருத்தல்
(3) புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்

# மேலும் ஒரு இலட்சம் 'பைசர்' தடுப்பூசிகள் நேற்று இலங்கைக்கு!




கொழும்பு, ஓக. 17

அமெரிக்காவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேலும் தொகை பைசர் தடுப்பூசிகள் நேற்று இலங்கை வந்துள்ளன.

அதன்படி, ஒரு இலட்சம் பைசர் தடுப்பூசி டோஸ்கள் நாட்டை வந்தடைந்துள்ளன என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் நேற்று அதிகாலை இந்தத் தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

460 கிலோகிராம் நிறையுடைய 13 பெட்டிகளில் குறித்த தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவை பாதுகாப்பாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, இதற்கு முன்னர் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட டோஸ்பைசர் தடுப்பூசிகள் அமெரிக்காவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பதிவு திருமணங்களை நடத்த கட்டுப்பாட்டோடு கூடிய அனுமதி

## பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

**கொழும்பு, ஓக. 17**

**தனிமைப்படுத்தல் உத்தரவுகள் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஊடகங்களுக்கு நேற்று விளக்கமளித்துள்ளார். இதற்கமைய, பதிவுத் திருமணங்களை நடத்துவதாயின், சம்பந்தப்பட்டவர்களின் வீட்டில் கட்டுப்பாடுகளுடன் அதனை நடத்த அனுமதி வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.**



இதன்போது, மணமகன் மற்றும் மணமகள் ஆகியோருடன், அவர்களின் பெற்றோர்களும், பதிவாளரும், சாட்சியாளர்கள் இருவரும் பங்கேற்க முடியும்.

இதனைத் தவிர்த்து வேறு எவருக்கும் இதன்போது பங்கேற்க அனுமதி இல்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், நேற்றிலிருந்து தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மிகவும் கடுமையாக அமுலாக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மாகாணங்களுக் கிடையிலான பயணத் தடை, இரவு நேர தனிமைப்படுத்தல் ஊரடங்கு, திருமணம் மற்றும் பொது நிகழ்வுகளுக்கான தடை மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

எனவே, அனைவரும் அதற்கமைய செயற்படுவார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# இளைஞர்கள் இருவர் மீது வெறியாட்டம் ஒருவரின் இரு கைகளும் வெட்டி எடுப்பு!

## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் கைது



காலி, ஓக. 17

காலி மாவட்டம், இரத்கம பிரதேசத்தில் இளைஞர்கள் இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளனர் எனவும், ஓர் இளைஞரின் இரு கைகளும் வெட்டப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இரு இளைஞர்களும் கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐந்து அல்லது ஆறு பேர் இணைந்து குறித்த இளைஞர்கள் இருவர் மீதும் வீதியில் வைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கைகள் வெட்டப்பட்ட இளைஞர் உட்பட மற்றைய இளைஞரும் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் இரண்டு கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைகள் வெட்டப்பட்ட இளைஞரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# மாகாணங்களுக்கிடையிலான தடையால் ரயில் சேவைகள் 64ஆக மட்டுப்படுத்தல்!



கொழும்பு, ஓக. 17

மாகாணங்களுக்கிடையில் நடமாட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், ரயில் சேவைகள் 64 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ரயில் திணைக்களப் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பிரதான மார்க்கத்தில் பயணிக்கும் ரயில்கள், அம்பேபுஸ்ஸ வரையில் பயணிக்கவுள்ளன.

புத்தளம் மார்க்கத்தில்பயணிக்கும்ரயில்கள் கொச்சிக்கடை வரையிலும், கரையோர மார்க்கத்தில் பயணிக்கும் ரயில்கள் அளுத்கம வரையிலும் மாத்திரம் சேவையில் ஈடுபடும் என்றும் ரயில் திணைக்களப் பொது முகாமையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# நீதிமன்றங்களின் செயல்பாடுகள் பற்றி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடிதம்

கொழும்பு, ஓக. 17

இலங்கையில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று நோயை எதிர்கொள்ளும் வகையில் நாட்டின் நீதித்துறை எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய கடிதத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரியவிடம் சமர்ப்பித்துள்ளது.

அந்தக் கடிதத்தில், நீதிமன்றங்களில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் சுகாதார விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நீதிமன்றத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க நெரிசலைத் தடுப்பது அவசியம். எனினும், நாட்டின் பல நீதிமன்றங்களில் இருந்து அது குறித்து அதிக கவனம் செலுத்தப்படவில்லை என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் அந்தக் கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய சூழ்நிலையில், விசாரிக்க முடியாத வழக்குகளை ஒத்திவைப்பது மற்றும் அத்தியாவசிய சாட்சிகளை மட்டும் நீதிமன்றத்துக்கு வரவழைப்பது பொருத்தமானது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# வவுனியா மாவட்டத்தில் மேலும் 50 பேருக்கு கொரோனா உறுதி



வவுனியா, ஓக. 17

வவுனியாவில் மேலும் 50 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள்சில வெளியாகியுள்ளன.

அதில், சூடுவெந்தபுலவு பகுதியில் இருவருக்கும், உளுக்குளம் பகுதியில் இருவருக்கும், சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் மூன்று பேருக்கும், தேக்கவத்தை பகுதியில் நான்கு பேருக்கும், புளியங்குளம் பகுதியில் இருவருக்கும், நொச்சிமோட்டைப் பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தை பகுதியில் மூன்று பேருக்கும், டொன் பொஸ்கோ சிறுவர் இல்லத்தில் இருவருக்கும், கற்குழி பகுதியில் ஒருவருக்கும், வைரவபுளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் இரண்டு பேருக்கும், ஆனைவிழுந்தான் பகுதியில் மூன்று பேருக்கும், சிப்பிக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, இறம்பைக்குளம் பகுதியில் இரண்டு பேருக்கும், குடாகச்சகொடி பகுதியில் ஒருவருக்கும், ஓலுமடு பகுதியில் ஒருவருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், பட்டானிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தை இராணுவ முகாமில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், மதவாச்சி பகுதியில் ஒருவருக்கும், பூம்புகார் பகுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் இரண்டு பேருக்கும், செட்டிகுளம் வைத்தியசாலையில் ஒருவருக்கும், வேலன்குளம் பகுதியில் ஒருவருக்கும், செட்டிகுளம் பகுதியில் ஒருவருக்கும், ஹொரவப்பொத்தானை பகுதியில் ஒருவருக்கும், செக்கட்டிப்புலவு பகுதியில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)



# தலிபான் ஆட்சியில் காபூலின் முதல்நாள்!

காபூல், ஓக. 17

காபூலில் வாழும் ஆப்கானியர்கள் நேற்று தலிபான்களின் ஆட்சியில் முதல் முழுநாளாக எழுந்திருந்தனர். நாட்டின் பெயரை ஆப்கான் இஸ்லாமிய அமீரகம் என்று தலிபான்கள் பிரகடனம் செய்திருந்தனர்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கம் போரில் வீழ்ச்சியை சந்தித்ததை தொடர்ந்து ஜனாதிபதி அஷ்ரப் கானி வெளிநாடு தப்பிச் சென்றார். இந்த நிலையில், எந்த எதிர்ப்புமின்றி நேற்றுமுன்தினம் மாலை தலைநகருக்குள் தலிபான்கள் நுழைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் அரச நிர்வாக தளங்கள் முழுவதையும் ஏற்கனவே தலிபான்கள் தம் வசம் கொண்டு வந்திருந்தனர். அன்று மாலையே ஜனாதிபதி மாளிகையையும் தலிபான்கள் கைப்பற்றி தமது இருப்பிடமாக்கிக் கொண்டனர்.

இந்த நிலையில், காபூலின் தெருக்கள் முழுவதும் தலிபான்களை காணமுடிகின்றது. ரோந்து மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நாட்டை விட்டு வெளியேறும் நோக்கில் சர்வதேச விமான நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஹெய்ட்டி நிலநடுக்கம்: மரணம் 1,297ஆக உயர்வு

போர்ட் ஓபிரின்ஸ், ஓக. 17

ஹெய்ட்டி நில நடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 297ஆக உயர்ந்துள்ளது. கரீபியன் நாடான ஹெய்ட்டியில் கடந்த சனிக்கிழமை 7.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் 304 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் இந்தத் தொகை உயரலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மீட்பு குழுவினரின் நடவடிக்கையில் மேலும் பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. நில நடுக்கத்தால் நில நடுக்கத்தால் 1,500 வீடுகள் முழுமையாக அழிந்தன. 3,000 வீடுகள் சேதமடைந்தன. தேவாலயங்கள், பாடசாலைகள் இடியுண்டன. காயமடைந்தவர்களால் சில மருத்துவமனைகள் நிரம்பி விட்டன. இதேநிலையில், எண்ணிக்கை தெரியாதளவு மக்கள் காணாமல் போயுள்ளனர். 5,700 பேர் காயமடைந்துள்ளனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த மாதம் அந்த நாட்டின் ஜனாதிபதி கொல்லப்பட்ட நிலையில் அரசியல் நெருக்கடியில் அந்த நாடு உள்ளது இந்த நிலையில் ஏழ்மையான அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள நில நடுக்கம் அந்த நாட்டை மேலும் திணறடித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை, சென். லூயிஸ் டு சுட் நகரிலிருந்து 12 கி. மீற்றர் தொலைவில் நிலநடுக்க மையம் காணப்பட்டது. இதன் அதிர்வு 125 கிலோமீற்றர் தூரத்திலுள்ள போர்ட் ஓ பிரின்ஸிலும் உணர முடிந்ததாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில், பிரதமர் ஏரியல் ஹென்றி ஒரு மாதகால அவசரகால நிலையை பிரகடனம் செய்துள்ளார். ஹெய்ட்டியின் அயல் நாடான மொமினிக்கன் குடியரசு உணவு, மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது. கியூபா 250 மருத்துவர்களை அனுப்பி வைத்துள்ளது. (ஐ)

## விமான நிலையத்தில் குவியும் மக்கள்!

# அமெரிக்க படை துப்பாக்கி சூடு: பொதுமக்கள் ஐவர் உயிரிழப்பு!

காபூல், ஓக. 17

ஆப்கானிஸ்தானின் ஆட்சி அதிகாரம் தலிபான்கள் வசமானதைத் தொடர்ந்து மக்கள் விரக்தியடைந்து தப்பியோட முயல்கின்றனர். காபூல் விமான நிலையத்தில் அச்சம் நிறைந்த காட்சிகளை பிரதிபலிக்கின்றது.

இந்த நிலையில், அங்கு தங்கியிருந்த நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்களும் ஆயிரக்கணக்கான மக்களும் வெளியேறுவதற்காக விமான நிலையத்தில் மக்கள் அலைகடலாக திரண்டுள்ளனர்.

விமான நிலையம் அமெரிக்க படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. விமான நிலையத்தில் கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்க படையினர் நேற்று



காற்றில் சுட்டனர்.

இந்த சம்பவத்தில் ஐவர் உயிரிழந்தனர். எனினும், இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டில் இவர்கள் இறந்தனரா அல்லது கூட்டநெரிசலில் சிக்கி இறந்தனரா என்பது தெரியவரவில்லை. (ஐ)

# கனடா பாராளுமன்றம் கலைப்பு: செப்ரெம்பர் 20ஆம் நாள் தேர்தல்!

ஒட்டாவா, ஓக. 17

கனடா பாராளுமன்றம் கலைக்கப்பட்டு கூட்டாட்சித் தேர்தல் செப்ரெம்பர் 20ஆம் திகதி நடைபெறும் என்று கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கனடாவின் ஆளுநர் நாயகம் மேரி சைமனைச் சந்தித்த அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் கோரிக்கையை முன்வைத்தார்.

இதனையடுத்துச் செய்தியாளர்களிடம் பேசிய லிபரல் கட்சித் தலைவரான ட்ரூடோ, தனது கோரிக்கையை ஆளுநர் நாயகம் ஏற்று அங்கீகரித்ததார் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து கனடாவின் 44ஆவது கூட்டாட்சி தேர்தலுக்காக பணிகளை அவர் முறையாகத் தொடங்கினார். தேர்தல் அறிவித்தலைத் தொடர்ந்து லிபரல் கட்சி வேட்பாளர்களை இணைய வழி நேரலை வீடியோ தொடர்பாடல் மூலம் சந்தித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

இதேவேளை, தேர்தல் செப்ரெம்பர் 20ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 36 நாட்கள் தேர்தல் பரப்புரைகள் இடம்பெறும். கனடிய தேர்தல் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் மிகக் குறுகிய கால பரப்புரைக்கான காலம் இதுவாகும். (ஐ)

# காபூலில் எஞ்சியுள்ளோரை மீட்க படையை அனுப்புகிறது பிரான்ஸ்!

பாரிஸ், ஓக. 17

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டிருக்கின்ற கவலைதரும் நிலைமை குறித்து விவாதிப்பதற்காக அதிபர் மக்ரோன் விசேட பாதுகாப்புச்சபைக் கூட்டம் ஒன்றைக் கூட்டி ஆலோசனை நடத்தியுள்ளார்.

காபூலில் இன்னமும் தங்கியுள்ள தூதரகப் பணியாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பிரெஞ்சுப் பிரஜைகளை அங்கிருந்து மீட்டுவரும் பணியில் இராணுவத்தை ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் (UAE) இருந்து விமானங்கள் காபூலுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்தப் மீட்புப்படை நடவடிக்கைக்கு ”ஒப்ரேஷன் ஆபகான்” (Operation Apagan) எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

பிரான்ஸின் இராஜதந்திரிகளுக்கும் அங்கு நிலைகொண்டிருந்த படையினருக்கும் மொழிபெயர்ப்பு உட்பட பல வழிகளில் உதவியாளர்களாகப் பணியாற்றி வந்த ஆப்கானியர்கள் பலருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பிரான்ஸில் தஞ்சம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடன் சேர்ந்து தலிபான்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய பத்திரிகையாளர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், கலைஞர்கள் உட்பட 625 ஆப்கானிய பிரஜைகளும் அங்கிருந்து மீட்டு வரப்படவுள்ளனர். (ஐ)

# அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எமக்கு துரோகம் இழைத்துவிட்டார்

## வெள்ளை மாளிகை முன் ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், ஓக. 17

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் துரோகம் இழைத்துவிட்டார் என ஆப்கான் மக்கள் வெள்ளை மாளிகை முன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய நிலையில், தலிபான் தீவிரவாதிகள் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். இதனால், அந்நாட்டு மக்கள் தொடர்ந்து வெளிநாடுகளுக்குத் தப்பித்துச் செல்கின்றனர். ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.இதனைத் தொடர்ந்து நேற்று அமெரிக்க வெள்ளை மாளிகையின் முன் கூடிய ஆப்கன்வாசிகள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

”பைடன் எங்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார். அவர்தான் இதற்குக் காரணம். தலிபான்கள் மீண்டும் ஆப்கானை கைப்பற்றியுள்ளார்கள். ஆப்கானியர்கள் மீண்டும் நாடு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு அமைதி வேண்டும்” என்ற முழக்கங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் பங்கேற்ற ஃபர்சானா ஹபிஸ் கூறும்



போது, “தலிபான்கள் ஆட்சியில் பெண்களுக்கு சுதந்திரம் கிடையாது. புர்கா அணியும் காலத்திற்கு நாங்கள் செல்ல விரும்பவில்லை. அது சுதந்திரம் கிடையாது. எனது குடும்பம் அங்கு உள்ளது. என்னால் உறங்க முடியவில்லை. இது எனது மக்களுக்கு ஏற்பட்ட ஆபத்து” என்றார். (ஐ)

ஈழநாடு





## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்: மேற்கிந்திய தீவுகள் 'த்ரில்' வெற்றி!

கிங்ஸ்ரன், ஓக. 17

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஒரு விக்கெட்டால் த்ரில் வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சென்றுள்ள பாகிஸ்தான் அணி தற்போது இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

முதல் போட்டி கடந்த 12ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 217 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பிராத் வெயிட் 97, ஹோல்டர் 58 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க 253 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மூன்றாம் நாள் ஆட்ட நிறைவில் 160 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்த நிலையில் இருந்தது. அணித் தலைவர் பாபர் அஸாம் 54 ஓட்டங்களுடன் போராடினார்.

நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது மேலதிகமாக ஓர் ஓட்டத்தை எடுத்து பாபர் அஸாம் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து விக்கெட்கள் வேகமாக விழ, 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது பாகிஸ்தான் அணி.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் சீல்ஸ் 5, ரோச் 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

முதல் இனிங்ஸில் 34 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 168 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், மேற்கிந்திய வீரர்களை நிலைக்க விடாமல் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் விக்கெட்களை வீழ்த்தினர். இதனால், மேற்கிந்தியத் தீவுகள் தடுமாறியது.

எனினும், ரோஸ்ரன் சேஸ், பிளக்வூட் இணை தாக்குப்பிடித்து ஆடியது. சேஸ் 22, பிளக்வூட் 55 ஓட்டங்களைப் பெற்றனர். ஹோல்டர் 16 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகளின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியானது.

ஆனால், அடுத்து இறங்கிய கீமர் ரோச் நிதானமாக ஆடினார். அவர் பொறுப்புடன் ஆடி ஒன்று, இரண்டு ஓட்டங்களாக சேர்த்து அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றார்.

இறுதியில், மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களை எடுத்து த்ரில் வெற்றி பெற்றது.

இதன் மூலம், இந்தத் தொடரில் 1 - 0 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னிலை வகிக்கின்றது.

பாகிஸ்தான் அணி சார்பில் ஷஹீன் அப்ரிடி 4 விக்கெட்கள், ஹசன் அலி 3 விக்கெட்கள், பஹீம் அஷ்ரப் 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

## ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ்: பட்டம் வென்றார் ஜியோர்ஜி!




ரொறன்ரோ, ஓக. 16

கனடாவின் ரோஜர்ஸ் கிண்ணத்தை கைப்பற்றினார் இத்தாலியின் கமாலி ஜியோர்ஜி.

கனடாவின் பிரபல ரென்னிஸ் தொடரான ரோஜர்ஸ் கிண்ண தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், செக் குடியரசின் கரோலினா பிளெஸ்கோவா இத்தாலியின் கமாலி ஜியோர்ஜி எதிர்கொண்டார்.

கமாலி 6 -3, 7 -5 என்ற செற்களில் இலகுவாக பிளெஸ்கோவாவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். (ஐ)

## இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட்:
# சமநிலை நோக்கி நகர்வு!

லண்டன், ஓக. 17

இந்தியா - இங்கிலாந்து இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலை நோக்கியே நகர்ந்து வருகின்றது. நேற்று மதிய போசனத்திற்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது இந்திய அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 286 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இங்கிலாந்து சென்ற இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதல் இனிங்ஸில் ஆடிய இந்திய அணி 126.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 364 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய, இங்கிலாந்து 128 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 391 ஓட்டங்களைப் பெற்று 27 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது இந்திய அணி. தொடக்க வீரர்களான ராகுல் 5, ரோஹித் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, கோலியும் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார். நேற்று முன்தினம் மதிய போசன இடைவேளையின் போது 56 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து அந்த அணி தடுமாறியது.

எனினும், புஜாரா, ரஹானே இணை பொறுப்பாக ஆடினர். துடுப்பாட்டத்தில் புஜாரா திணறினாலும், பந்துகளை அநாவசியமாக வீணடித்துக் கொண்டிருந்தார். முதல் ஓட்டத்தை எடுப்பதற்காக 39 பந்துகளை செலவழித்தார். 100 பந்துகளை எதிர்கொண்டபோது 12 ஓட்டங்களையே பெற்றிருந்தார். எனினும் மறுபுறத்தில் ஓரளவு ஓட்டங்களை சேர்த்து நிதானம் காட்டினார் ரஹானே.

206 பந்துகளை சந்தித்த புஜாரா 45 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ராஹனே 61 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த ரிஷப் பந்த் நிதானம் தவறி ஆடி




22 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இந்த நிலையில், 100 ஓவர்களை கடந்தது இந்திய அணி. முஹமட் சமி, பும்ரா ஆகியோர் 9ஆவது விக்கெட்டுக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரின் ஆட்டத்தாலும் இந்திய அணி ஓரளவு மீண்டாலும், போட்டியை தக்கவைப்பதற்கான வாய்ப்பை ஒருபுறம் இழந்துகொண்டிருந்தது.

நேற்று மதிய போசனத்திற்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 108 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 286 ஓட்டங்களை அந்த அணி பெற்றிருந்தது.

முஹமட் சமி 52 ஓட்டங்களையும், பும்ரா 30 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் சார்பில் மார்க் வூட் 3 விக்கெட்களையும், ரொபின்சன், மொயீன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றியிருந்தனர்.

மதிய நேரத்தின் பின்னர் இங்கிலாந்து அணிக்கு துடுப்பெடுத்தாடும் வாய்ப்பு வழங்கப்பட்டாலும் நேற்றைய நாள் ஆட்டமே இறுதிநாள் ஆட்டம் என்பதால் போட்டி சமநிலையில் முடிவடைவதற்கான ஏதுநிலையே காணப்பட்டது. (ஐ)

# உலகக் கிண்ணத்தில் விளையாடுவோம்!

## ஆப்கான் கிரிக்கெட் சபை

காபூல், ஓக. 17

ஆப்கானிஸ்தான் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில், அசாதாரண சூழ்நிலைகளால் ஆப்கானிஸ்தான் இருபது - 20 உலகக்கிண்ணத் தொடருக்கு தயாராக முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில், இருபது - 20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்போம் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊடகப் பேச்சாளர் ஹிக்மாட் ஹசன் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் விளையாடுவோம். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில நாட்களில் உலகக்கோப்பைக்கான அணியில் விளையாட இருக்கும் வீரர்கள் காபூல் நகருக்கு பயிற்சி மேற்கொள்ள வருவார்கள்.

அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுடன் இணைந்து விளையாட இருக்கும் முத்தரப்பு இருபது - 20 தொடரை நடத்துவதற்கான இடத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். உலகக் கிண்ணத்துக்கு தயார்படுத்த இந்தத் தொடர்கள் சிறந்தவையாக இருக்கும்.

ரஷீத் கான், முகமது நபி ஆகியோர் தற்போது ஆப்கானிஸ்தானில் இல்லை. நாங்கள் எப்போதும் எங்களுடைய வீரர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் உதவி வருகிறோம். எங்களால் என்னென்ன முடியுமோ? அதையெல்லாம் செய்வோம்.", என்றார். (ஐ)



# கொரோனா மரணங்களை தவிர்க்க நாட்டை உடன் முடக்கவேண்டும் அரசு

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 17

"பொருளாதாரமா, ஒட்சிசனா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. இதற்கு அரசு நியாயமான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் கொரோனா மரணங்களைத் தவிர்க்க நாட்டை உடனடியாக முடக்க வேண்டும். இதன்மூலமே எமது மக்கள் உயிரிழப்பதைத் தடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல மூன்றாம் தடுப்பூசியை இப்போதே அரசு தயார்படுத்த வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் பரவல் குறித்த உண்மை நிலைவரம் தொடர்பான தரவுகளை அரசு வெளியிடும் வேளையில் அதன் உண்மைத் தன்மையில் சந்தேகம் எழுகின்றது. இது எமக்குப் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறித்து வெளியிடப்பட்ட தரவுகளில் தவறுகள் இடம்பெற்றுள்ளமை வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

நாட்டின் உண்மை நிலைமை என்னவென்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மக்களுக்கு நாம் உண்மையைக் கூறும் நபர்கள் என்ற விதத்தில் எமக்கு உண்மையான கள நிலைவரம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

உண்மையைக் கூறினால் மட்டுமே கட்சி பேதமின்றி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க எம்மாலும் செயற்பட முடியும். மாயைகளுக்கு அடிபணிந்து செயற்பட நினைத்தால் இறுதியாக நாடே நெருக்கடியில் விழும்.

நாம் மக்களுக்கான எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்றக் கொடுப்பனவுகளைத் தியாகம் செய்து மக்களுக்குச் சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்" - என்றார். (இ)

## பலாங்கொடை வர்த்தக நிலையங்களும் பூட்டு!

பலாங்கொடை, ஓக. 17

பலாங்கொடை நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் ஒரு வாரத்துக்குத் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை வர்த்தக சங்கத்துக்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இவ்விடயம் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பலாங்கொடை நகர சபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் நாளை 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு மூடப்படவுள்ளன என்று பலாங்கொடை வர்த்தக சங்கத்தின் தலைவர் லால் கலப்பத்தி தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

மலர்வு 20 - 12 - 1928



உதிர்வு 15 - 08 - 2021

### சின்னையா சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் மலேசியா, கோப்பாய், நியூசிலாந்து, வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவசுப்பிரமணியம் கடந்த (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா – சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா – வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் பாலசுப்பிரமணியம் (மணியம் Radio Service, கோப்பாய்), இரத்தினமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குசலகுமாரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு), ரவீந்திரன்(அவுஸ்திரேலியா), மனோரஞ்சன் (ஜேர்மனி), குணசீலன் (லண்டன்), தயாபரன் (நியூஸிலாந்து) ஆகியோரின் தந்தையும், நளினி (அவுஸ்திரேலியா), மலர்வதனி (ஜேர்மனி), சுடர்வதனி (லண்டன்), பூ (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரட்ணசிங்கம், காலஞ்சென்றவர்களான ராஜேஷ்வரி, இராஜரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஜீவினி – வித்தியதர்சன்(கொழும்பு), சயந்தினி – றொஷான் (கொழும்பு), தஜிரதன், அபிராமி (அவுஸ்திரேலியா), நர்த்தனா, கீர்த்தனா, அர்ச்சனா(ஜேர்மனி), தக்சினி, கவிலாஷ் (லண்டன்), நச், நான் இன்டர், ஆதர், வின்னர் (நியூசிலாந்து) ஆகியோரின் ஆசைப் பேரனும், தக்ஷரனின் (கொழும்பு) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**ஜெயா (மகள்) - 0776142635**
**ரவி (மகன்) - 0061401752995**
**ரஞ்சன் (மகன்) - 004915771315528**
**சீலன் (மகன்) 00447891600422**
**தயா (மகன்) - 0064210459824**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கம்பஹாவில் அதிகரிக்கும் தொற்றாளர் 24 மணிநேரத்தில் 1,825 பேர் அடையாளம்

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலை வரையான 24 மணித்தியாலங்களில் 1,825 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார சேவைகள் காரியாலயம் நேற்று அறிவித்துள்ளது.

பியகம பொதுச் சுகாதாரப் பிரிவிலேயே அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த சுகாதார பிரிவில் 222 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்மைவாக மஹர சுகாதார பிரிவில் 215 தொற்றாளர்களும், ஜா - எல சுகாதாரப் பிரிவில் 201 தொற்றாளர்களும் வத்தளை சுகாதாரப் பிரிவில் 198 தொற்றாளர்களும், கம்பஹா சுகாதாரப் பிரிவில் 187 தொற்றாளர்களும், களனி சுகாதாரப் பிரிவில் 159 தொற்றாளர்களும், மினுவாங் கொடை சுகாதாரப் பிரிவில் 155 தொற்றாளர்களும், சீதுவை சுகாதாரப் பிரிவில் 146 தொற்றாளர்களும், மீரிகம சுகாதாரப் பிரிவில் 109 தொற்றாளர்களும், அத்தனகல சுகாதாரப் பிரிவில் 90 தொற்றாளர்களும், கட்டான சுகாதாரப் பிரிவில் 45 தொற்றாளர்களும், தொம்பே சுகாதாரப் பிரிவில் 44 தொற்றாளர்களும், நீர்கொழும்பு சுகாதாரப் பிரிவில் 22 தொற்றாளர்களும், ராகம சுகாதாரப் பிரிவில் 18 தொற்றாளர்களும், திவுலப்பிட்டி சுகாதாரப் பிரிவில் 14 தொற்றாளர்களும் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் ஆடைத் தொழிற்சாலை கொத்தணி தொற்றாளர்கள் 83 பேர் இனங் காணப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்களில் 562 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் 383 பேருக்கு ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. (இ)

## ஹற்றனிலுள்ள அரச வங்கி மூடல்

ஹற்றன், ஓக. 17


கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஹற்றன் நகரிலுள்ள அரச வங்கி ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனக் ஹற்றன் - டிக்கோயா பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்கியில் கடமையாற்றும் பாதுகாவலர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்தே வங்கி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மேலும், அங்கு கடமையாற்றும் முகாமையாளர் உட்பட 20 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன் அறிக்கை கிடைக்கும் வரை வங்கி மூடப்பட்டிருக்கும் எனவும் பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர் (இ)

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

மலர்வு 13 - 12 - 1950



உதிர்வு 18 - 07 - 2021

### சின்னத்துரை தங்கவடிவேல்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து மற்றும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கவடிவேல் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், தொலைநகல், மின்னஞ்சல், RIP BOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை பொருட்டு நாளை (17.08.2021) செவ்வாய்க்கிழமை மதியபோசனம் நண்பகல் 12.00 மணிக்கும் 18.08.2021 புதன்கிழமை இரவு போசனம் மாலை 6.00 மணிக்கும் அன்னாரின் இல்லமான 3 Grahamroad, Rugby Cv21 31d நடைபெறும். ஆகையால் எங்களது அழைப்பினை ஏற்று அனைவரும் வந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
**நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்.**

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
6ஆயிரத்து 263ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் ஒரே நாளில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோரின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

நாட்டில் ஒகஸ்ட் மாதத்தின் முதல் 15 நாள்களில் ஆயிரத்து 744 பேர் கொவிட் - 19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் நாட்டில் நேற்று 3 ஆயிரத்து 466 பேர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனால் நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் இன்று வரை 3 லட்சத்து 62 ஆயிரத்து 74 பேர் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 12 ஆயிரத்து 57 பேர் குணமடைந்துள்ளனர்.

43 ஆயிரத்து 921 பேர் மருத்துவமனைகள் மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் சிகிச்சை பெறுகின்றனர். 6 ஆயிரத்து 263 பேர் உயிரிழந்தனர்.

## தொற்றாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முறைப்படுத்தப்படவுள்ளது. அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் நேற்று திங்கட் கிழமை (ஒகஸ்ட் 16) முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளியை அப்பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி தொடர்பு கொண்டு அவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவதற்கு தகுதியானவரா என்பதனை முதலில் பரிசோதிப்பார்.

அப்போது கீழ்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

நோயாளி இரண்டு தொடக்கம் 65 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கொவிட்-19 நோய்த்தொற்று அறிகுறி எதுவும் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

கர்ப்பவதித் தாய்மார்களாயின் அவர்கள் 24 வாரங்களுக்குட்பட்ட கர்ப்பவதிகளாக இருத்தல்வேண்டும்.

வேறு நோய் நிலைமை உள்ளவர்களுக்கு அந்த நோய் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

நோயாளியின் வீடானது அவரை ஏனையவர்களிடமிருந்து நோய் பரவாது தனிமைப்படுத்தி வைத்திருக்கக்கூடிய வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.

நாளாந்தம் தொலைபேசி மூலம் அவரது நோய் நிலைமையை கண்காணிப்பதற்குரிய தொலைபேசி வசதிகள் நோயாளியின் வீட்டில் இருத்தல் வேண்டும்.

சுகாதார மருத்துவ அதிகாரியினால் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டால், அவரது விவரங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் இதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கணனி மென்பொருளில் தரவேற்றம் செய்யப்படும்.

அதன் பின்னர் மத்திய சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட அழைப்பு நிலையத்தில் இருந்து மருத்துவர்கள் தினமும் நோயாளியை தொடர்பு கொண்டு நோயாளியின் உடல் நிலைமையை கண்காணிப்பர்.

தேவை ஏற்படின் நோயாளியும் அந்த மருத்துவரைத் தொடர்பு கொள்ளமுடியும்.

நோயாளியின் உடல் நிலைமை மோசமடையும் சந்தர்ப்பத்தில் நோயாளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டியிருப்பின் அத்தகவல் உடனடியாக பிராந்திய தொற்று நோய் மருத்துவ அதிகாரிக்கு வழங்கப்படுவதைத் தொடர்ந்து அவர் அந்நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளை செய்வார்.

பி.சி.ஆர் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு நோயாளியும் இவ்வாறு 10 நாள்கள் வீட்டுப்பராமரிப்பில் வைத்திருக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்படுவர் - என்றுள்ளது.

## கன்னாதிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளையில் பணியாற்றும் அனைவரும் கட்டாய சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால், நேற்று முதல் வங்கி கிளை எதிர்வரும் 24ஆம் திகதி வரை முடக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 181ஆக உயர்வடைந்துள்ளது.

(அ-3)

## எதிர்பாராத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாழ்க்கை யில் எல்லாவற்றையும் மகிழ்ச்சி யுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறினார்.

சுகாதார அமைச்சர் பத வியை இழந்து வருத்தப்படுவதாகவும், இலக்கு வைக்கப்பட்ட சமூகத்தில் 54 சதவீதம் பேர் ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டிருப்பதால் இன்னும் நான்கு வாரங்களில் நாட்டை காப்பாற்ற முடியும் என்றும் அவர் கூறினார்.

சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து விடைபெற்றுச் செல்லும் அவருக்கு நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்ற குறுகிய பிரியாவிடை விழாவில் உரையாற்றும்போதே பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

இது திடீரென்று நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நான் செல்வதற்கு முன், அமைச்சின் செயலாளர் மருத்துவர் சஞ்சீவ முனசிங்க மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன ஆகியோரிடம் என் அமைச்சில் மாற்றம் ஏற்படுமா என்று தெரியவில்லை என்று சொன்னேன். ஆனால் அது நடக்காது என்று யாரும் சொல்லவில்லை.

இந்த நேரத்தில் உங்கள் ஆதரவுக்கு என் இதயத்தின் அடிப்பகுதியில் இருந்து நன்றி கூறுகிறேன். நாங்கள் ஒரு குழுவாக வேலை செய்தோம். ஒதுக்கப்பட்ட இலக்கை அடைய முயற்சித்தோம். செயலாளர் உட்பட அனைவரிடமிருந்தும் எனக்கு ஒரு இலட்சம் முறை ஆதரவு கிடைத்தது.

எதிர்பாராத தருணத்தில் என்னிடம் சுகாதார அமைச்சுக்கு பதிலாக போக்குவரத்து அமைச்சு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நான் அங்கு செல்லும் வரை இந்த மாற்றம் உண்மையில் நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும், நீங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நான் மிகவும் வருத்தமாக இருக்கிறேன். இவர்கள் அனைவருடனும் நான் மகிழ்ச்சியுடன் வேலை செய்தேன். யாரும் என்னை மன ரீதியாகவோ அல்லது வாய்மொழியாகவோ திட்டியதாக நான் நினைக்கவில்லை.

எங்களுக்கு மிகவும் கடினமான நேரம் இருந்தது. புதிய அமைச்சரையும் ஆதரிக்குமாறு நான் உங்களைக் கேட்கிறேன். இன்னும் 4 வாரங்கள் உள்ளன என்று நான் சொல்கிறேன். தற்போது நாங்கள் 54 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போட்டுள்ளோம். 4 வாரங்களில் இவர்கள் அனைவரும் இரண்டாவது டோஸ் பெறுவதால் இந்த நாட்டை நாம் காப்பாற்ற முடியும்- என்றார்.

# ஒட்சிசனை கொண்டுவர இந்தியா சென்றது கப்பல்!

கொழும்பு, ஒக. 17

இந்தியாவிலிருந்து ஒட்சிசன் வாயுவை கொண்டு வருவதற்காக இலங்கை கடற்படைக்கு சொந்தமான ‘சக்தி’ என்ற கப்பல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் சென்னை துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக, கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா கூறினார்.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், ஒட்சிசன் தேவையும் அதிகரித்துள்ளதால் அதனை இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்தது.

இதற்கமைய, இந்தியா மற்றும் மலேசியாவிலிருந்து ஒட்சிசன் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ)

# தற்போதைய நெருக்கடி நிலைக்கு எவரையும் குற்றம் சுமத்த முடியாது

## இராஜாங்க அமைச்சர் விமலவீர தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 17

“சமூக பொருளாதார, சுகாதார நெருக்கடி நிலைமைகளை எமது நாடு எதிர்கொண்டுள்ளது. இதற்கு எவரையும் குற்றம் சுமத்த முடியாது.”

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாடு தற்போது பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. சமூக பொருளாதார, சுகாதார நெருக்கடி நிலைமைகளை எமது நாடு எதிர்கொண்டுள்ளது. இதற்கு எவரையும் குற்றம் சுமத்த முடியாது.

அரசு என்ற வகையில் இந்தப் பிரச்னையிலிருந்து மீளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

ஆனால், அனைத்து தரப்பினரும் அரசை விமர்ச்சிக்கின்றனர். அவ்வாறு விமர்சிப்பவர்களின் மத்தியில் தியாகம் பண்ணுவதற்குத் தயாரானவர்கள் எவரும் இருக்கின்றனரா என வினவ விரும்புகின்றேன்.

இதற்கான தீர்வைப் பெற்றுத்தரக் கூடியவர்களும் இவ்வாறு விமர்சிப்பவர்களின் மத்தியில் இல்லை என்றே கூற முடியும்.

ஆனால், இந்த நாட்டின் மக்கள், பல சந்தர்ப்பங்களில் பல தியாகங்களைச் செய்துள்ளனர்.

அதற்குச் சிறந்த உதாரணமாக சுனாமி அனர்த்தத்தைக் கூற முடியும். இந்நிலையில் ஓர் ஆரம்பமாக இம்மாதத்தில் என்னுடைய சம்பளத்தில் பாதியைக் கொரோனாத் தொற்றைக் கட்டுப் படுத்துவதற்கான நிதியத்துக்கு வழங்கவுள்ளேன்.

ஏனெனில் விமர்சிப்வர்கள் மற்றும் கருத்துரைப்பவர்களாக இருப்பதன் ஊடாக எம்மால் தப்பித்துக்கொள்ள முடியாது.

மக்களும் அதனையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், இவ்வாறு வழங்க முன்வரும்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தனவந்தவர்கள் எனக் கூறுவர்.

ஆனால், பாராளுமன்றத்தில் இருப்பினும் சொந்தமாக என்னுடைய பெயரில் வீடொன்று இல்லாத ஒரு நபராகவே நான் உள்ளேன் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்” - என்றார்.

(இ)

## பொதுமக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயல்முறை மேற்கொள்ளப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றொரு குறிப்பில் குற்றம்சாட்டியது.

## கொடிகாமம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றாளர்கள் கொடிகாமம் சந்தைத் தொகுதியில் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அதன் தொடராக நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரி ஜென் பரிசோனையில் 13 பேர் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து பொதுச் சந்தையை தற்காலிகமாக மூடு வது என்றும் அன்ரி ஜென் பரிசோதனையில் எதிர்மறை முடிவுகள் வந்தவர்களுக்கு மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளவது என்றும் அதன் பின்னர் தொற்றில்லாதவர்களுக்கு அடை யாள அட்டை வழங்கிய பின்னர் சந்தையை மீளத் திறப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(அ-2)

## நீரிழிவு நோயாளர்கள்

# இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்

கொழும்பு, ஒக. 17

நீரிழிவு நோயாளர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வது அவசியம் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உட்சுரப்பியல் விசேட வைத்திய நிபுணர் விசேட வைத்திய நிபுணர் உதித புலுகஹப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீரிழிவு நோயாளர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானாலும்கூட நீரிழிவு நோய்க்கான மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதிக அவதானத்துக்குரிய நீரிழிவு நோயாளர்களே அதிகளவு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வருகின்றனர் என்றும், எனவே அவ்வாறானவர்கள் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## முஸ்லிம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேல்மட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

ஆனால், முழு அமைச்சரவை மாற்றம் நேற்று செய்யப்படாத காரணத்தினால் இவர்களை அடுத்த அமைச்சரவை மாற்றத்தில் உள்வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்படவுள்ளது.

அடுத்த வாரங்களில் இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது.

ஈழநாடு
Eelanadu

# உலகில் மிக வேகமாக மரணம் சம்பவிக்கும் நாடாக இலங்கை

## ராஜித எம்.பி. தரவுகளுடன் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 17

**உலகில் மிக வேகமாகக் கொரோனா மரணங்கள் சம்பவிக்கும் நாடாக இலங்கை உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

"ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கி இணைந்து உலகளாவிய ரீதியிலான கொரோனா மரணங்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளன.

இதில் இலங்கை எந்த இடத்தில் உள்ளது என்பது தொடர்பான தகவலும் வெளியாகியுள்ளது.

உலக தகவல்களுக்கு அமைய கொரோனா வைரஸ் பரவலில் நமது நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. அதிகளவு கொரோனா மரணங்கள் சம்பவிக்கும் இரண்டாவது நாடாக இலங்கை உள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்னர் எடுத்துக்கொண்டால் நமது நாடு நான்காவது இடத்தில் உள்ளது.

தொற்றாளர்கள் உயிரிழக்கும் சதவீதத்தைக் குறைத்து அல்லது அதிகரித்துப் பார்த்தால் இலங்கை முதலாவது இடத்தில் உள்ளது.

உலகில் மிக வேகமாகக் கொரோனா மரணங்கள் சம்பவிக்கும் நாடாக இலங்கை உள்ளது.

நமது நாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின் பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் மில்லியனுக்கு 5.7 வீதமானோர் கொரோனாத் தொற்றால் மரணமடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 1.9 வீதமானோர் மரணிக்கின்றனர். இங்கிலாந்தில் 1.33 வீதமானோரும், பிரான்ஸில் 0.76 வீதமானோரும், இந்தியாவில் 0.35 வீதமானோரும் மரணிக்கின்றனர். எனினும், இலங்கையில் 5.73 வீதமானோர் மரணிக்கின்றனர்.

இது இந்தியாவுடன் ஒப்பிடுகையில் பல மடங்கு அதிகமாகும். இலங்கையில் 15ஆம் திகதி நிலவரத்தைப் பார்க்கும்போது கொரோனா மரணங்கள் 6000ஐ அண்மித்துள்ளன.

நேற்று (நேற்றுமுன்தினம்) 161 மரணங்கள் பதிவாகியுள்ளன. இந்த எண்ணிக்கைகள் தொடர்பிலும் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. சுகாதார அமைச்சு ஊடாக அரசு வெளியிடும் கொரோனா புள்ளிவிவரங்களில் குளறுபடிகள் இருப்பது தெரியவந்துள்ளது.

குறிப்பாக கம்பஹா மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 629 என்று அரசு கூறும்போது உண்மையான நிலவரம் 12 ஆயிரத்து 555 ஆகக் காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 என்று அரசு கூறும்போதும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொற்றாளர்களின் எண்ணிக்கை 342 என்று கூறுகின்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் 71 என்று அரசு கூறும்போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் 163 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று தகவல்களை வெளியிட்டுள்ளார்" - என்றார். (இ)

# எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தில் 91 பேருக்கு கொரோனா உறுதி!

கொழும்பு, ஓக. 17

பிலியந்தலை எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தில் உள்ள 50 சிறுவர்கள் உள்ளிட்ட 91 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கெஸ்பேவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இவர்களில் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனையவர்களில் அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் 17 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த சிறுவர் கிராமத்துக்கு உள்நுழைவதற்கும் மற்றும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கிராமத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

# மஞ்சள் கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி, ஓக. 17

பூநகரி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அத்தியாவசிய சேவைகள் எனப் போடப்பட்ட பதாகையுடன் கௌதாரிமுனையிலிருந்து கொழும்புக்கு மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட கூலர் ரக வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

அத்தியாவசிய பொருட்களுடன் சேர்த்து மறைத்துக் கொண்டு செல்லப்படவிருந்த மஞ்சள் மூடைகளையே பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த மஞ்சள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கிளிநொச்சி கௌதாரிமுனைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தைக் கைப்பற்றிய பொலிஸார், வாகன சாரதி மற்றும் உதவியாளரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

43 வயது மற்றும் 23 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# ஹேமந்த ஹேரத் மீண்டும் தனிமை

கொழும்பு, ஓக. 17

சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளரும், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகமுமான மருத்துவர் ஹேமந்த ஹேரத் மீண்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

கொவிட் தொற்றுக்கு இலக்கான நபர் ஒருவருடன் தொடர்புபட்ட முதன் நிலை தொடர்பாளராக அவர் இனங்காணப்பட்ட நிலையிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இதற்கு முன்னரும் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# இரவில் பேய்கள் நடமாடும்வேளையில் மக்கள் எங்கு செல்லப் போகின்றனர்?

## ஊரடங்கு தொடர்பில் ஜனாதிபதியிடம் சமீர கேள்வி

கொழும்பு, ஓக. 17

"ஜனாதிபதி, இரவு முதல் அதிகாலை வரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார். இரவில் பேய்கள் நடமாடும் வேளையில் மக்கள் எங்கு செல்லப் போகின்றனர்? இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரையில் கொரோனா வைரஸ் பரவுமென்று ஜனாதிபதிக்குப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்கள் வழங்கியுள்ளனரா?"

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஒன்றிணைந்த பிரஜைகளின் கூட்டமைப்பின் ஒருங்கமைப்பாளர் சமீர குமார.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கழுதைக்குச் செல் என்று கூறினால் அது எங்கு செல்கின்றது? என்ன செய்கின்றது? என்று தெரியாது. அவ்வாறான செயற்பாட்டையே ஜனாதிபதி செய்து வருகின்றார்.

மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்க வேண்டும், பயணங்களைத் தடுக்க வேண்டும், மக்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி செயற்படுவதைத் தடுக்க வேண்டும், நாட்டை முடக்குங்கள் என்று சுகாதார நிபுணர்கள், சுகாதார தொழிற்சங்கங்கள் என்பன ஒன்றிணைந்து கூட்டாகக் கோரிக்கை விடுத்து வருகின்றன.



இதனைக் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி இதோ நாட்டை முடக்குகின்றேன் என்று கூறி, இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார். இது குருடன் யானை யைப் பார்த்த கதையாக உள்ளது.

மக்கள் ஒன்றுகூடும் நேரங்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்றே சுகாதார நிபுணர்கள் கோரினர். மக்கள் ஆங்காங்கே செல்வதையும் வாகனங்களில் பயணிப்பதையும் ரயில்களில் பயணிப்பதையும் தடுத்து நிறுத்துங்கள் என்றே சுகாதார நிபுணர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாகவே முடக்கம் ஒன்று தேவை என்று அவர்கள் கோரினர்.

ஆனால், ஜனாதிபதி இரவு முதல் அதிகாலை வரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

பேய்கள் நடமாடும் வேளையில் மக்கள் எங்கு செல்லப் போகின்றனர்?

இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரையில் கொரோனா வைரஸ் பரவுமென்று ஜனாதிபதிக்குப் புலனாய்வுப் பிரிவினர் தகவல்கள் வழங்கியுள்ளனரா?"

- என்று அவர் கேள்வி எழுப்பினார். (இ)

# விளக்கமறியல் கைதிகளுக்கு பிணை வழங்க நடவடிக்கை

## சிறைகளில் நெருக்கடியை தவிர்ப்பதற்கு

கொழும்பு, ஓக. 17

சிறைச்சாலைகளில் நெருக்கடிகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பிணை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களில் பிணை வழங்கவும், விளக்கமறியலில் உள்ள கைதிகளுக்கு பிணை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க வெளியிட்டுள்ளார்.

சிறைச்சாலையினுள் நெரிசலை குறைப்பதற்காக சிறைச்சாலை ஆணையாளரால் சட்டமா அதிபரிடம் விசேட கோரிக்கையொன்று முன் வைக்கப்பட்டுள்ளது. அந்த கோரிக்கைக்கு அமைய சட்டமா அதிபரால் பொலிஸாருக்கு விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. முக்கியமான வழக்குகளுக்காக நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்படும் கைதிகள் தவிர ஏனையோரை விளக்கமறியலில் வைப்பதை தவிர்க்குமாறு அந்த சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிணை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களில் பிணை வழங்குமாறும் விளக்கமறியலில் உள்ள கைதிகளுக்கு பிணை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட கொவிட் தொற்று பரவலை தடுப்பதற்கு மற்றுமொரு நடவடிக்கையாக 14,000க்கும் மேற்பட்ட சிறைக் கைதிகளுக்கு சினோபார்ம் தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ளது என சிறைச்சாலை பேச்சாளர் தெரிவித்தார்




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்

07.05 மணி : உளவியல் கருத்து -உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்

7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : தொடர் நாடகம்

11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )

1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - தலைவா.24 திரைப்படக் காட்சிகள்

4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்

6.00 மணி : சினிமா சினிமா

6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி

10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

07.00 மணி : இன்றைய சிந்தனை

07.05 மணி : இன்றைய நாள்

07.30 மணி : மங்கள இசை

08.00 மணி : அருளுரை

08.30 மணி : திருவாசகம்

09.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பாடல்கள்

10.30 மணி : பஜனை

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

8.00 மணி : ஜெபமாலை

9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்

09.30 மணி : மன்றாடு

10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

02.00 மணி : நற்சிந்தனை

03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு